விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 195 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 18 புதன்கிழமை (02.07.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

பழைய - புதிய செம்மணி வழக்கை

## நீதிமன்ற அனுமதியுடன் தொடர்புபடுத்த நடவடிக்கை



சட்டத்தரணி ரனித்தா ஞானராஜா

(யாழ்ப்பாணம்)

பழைய செம்மணி புதைகுழி வழக்கும் புதிய செம் மணி புதைகுழி வழக்கும் வேறு வேறு வழக்காக இருந் தாலும் இரண்டு வழக்கையும் தொடர்புபடுத்த வேண் டிய நிலைமை இருப்பதனால் 15ஆம் பக்கம் பார்க்க

## என்புக்கூடுகளை தோண்டுவது தேவையற்ற நடவடிக்கை

செம்மணி விவகாரம் தொடர்பில் வீரவன்ஸ



(கொழும்பு)

உயிரிழந்த மக்களின் என்புக்கூடுகளைத் தேடிக் கடந்த காலத்தைத் தோண்டும் நடவடிக்கை, தற்போது தேவையற்ற விடயமாகும்.

மாறாக எதிர்காலத்தில் அவ்வாறான சம்ப வங்கள் நிகழாமல் தடுப்பதற்கு மக் களின் இதயங்களைக் குணப்படுத்த வேண்டும் 16ஆம் பக்கம் பார்க்க

செம்மணி மனிதப் புதைகுழியில்

# சிறுவர்கள் விளையாடும் பொம்மை மீட்பு

(யாழ்ப்பாணம்)

- 5 எலும்புக்கூடுகள் நேற்றும் அடையாளம்.
- எலும்புக்கூடுகள் ஒன்றோடு ஒன்று பிணைந்து காணப்படுவதனால் அகழ்வதில் தாமதம்.

(16ஆம் பக்கம் பார்க்க)



## நிஷாந்த வீரசிங்க கைதாகி மறியலில்



(கொழும்பு)

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக் களத்தின் முன்னாள் ஆணையாளர் நிஷாந்த வீரசிங்க உள்ளிட்ட மூன்று 16ஆம் பக்கம் பார்க்க

மானிப்பாய் தெற்கில்

## கிணற்றில் விழுந்த குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் தெற்கில் கிணற்றில் விழுந்த குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான கணேசராசா சுவா கரன் (வயது-42) என்பவரே 15ஆம் பக்கம் பார்க்க

கட்டுநாயக்கவில்

## முல்லைத்தீவு இளைஞன் கைது

(கொழும்பு)

போலிக் கடவுச்சீட்டுக் களைப் பயன்படுத்தி ஐக் கிய இராச்சியத்துக்கு தப் 15ஆம் பக்கம் பார்க்க

## ஓமந்தையில் தனியார் காணியை அபகரித்து விகாரை அமைக்க முயற்சி?

(ஓமந்தை)

ஓமந்தை பொலிஸ் நிலை யத்திற்கு அருகில் தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணியினை பொலிஸார் அப கரித்து விகாரை அமைப்ப தற்கு முயற்சிப்பதாகத் தெரிய வருகிறது.

ஏ9 வீதியில் ஓமந்தை பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள தனி யார் ஒருவருக்குச் சொந்த மான காணியை நேற்று முன் தினம் திங்கட்கிழமை (30) அன்று துப்பரவு செய்த ஓமந் தைப் பொலிஸார் குறித்த இடத்தில் விகாரை ஒன்றை அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்வதாக அப்பகுதி மக்கள் குற்றம் சுமத்தினர்.

குறித்த காணி நீண்ட கால மாக ஒருவரின் பராமரிப்பில் இருந்தபோதிலும் அவருக் 15ஆம் பக்கம் பார்க்க

தெல்லிப்பழையில்

## விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழையில் விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் ஒருவர் 15ஆம் பக்கம் பார்க்க

## மின்சாரம் தாக்கியதில் கொக்குவிலில் ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)



கொக்குவிலில் மின்சாரம் தாக்கி யதில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நல்லூர் பிரதேச சபையின் ஆளு கைக்கு உட்பட்ட கொக்குவில் சந் தையை அண்மித்த பகுதியில் நேற் றுச் செவ்வாய்க்கிழமை காலை, வீதி மின் விளக்கு 15ஆம் பக்கம் பார்க்க

## பஸ் கட்டணம் குறைப்பு

(கொழும்பு)

பஸ் கட்டணத்தை 0.55 சதவீதத்தால் குறைப்பதற்குத் தீர்மானித்துள்ளதாகத் தேசிய போக்குவரத்து ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

பஸ் கட்டணத் திருத்த சட் டத்தின்படி, பஸ் கட்டணத்தை 15ஆம் பக்கம் பார்க்க

யாழ்.மாவட்டத்தின்

## மேலதிக அரசாங்க அதிபராக சிவகரன் பதிவியேற்பு

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாண மாவட்டத்தின் மேலதிக அரசாங்க அதிராக கைலாயபிள்ளை சிவகரன் நேற்றுப் பதவியேற்றார்.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் 16ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணிப் புதைகுழி அகழ்வை நோட்டமிட்ட மர்ம வாகனம்



(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பகுதிகளை மர்ம வாகனம் ஒன்று நோட்டமிட்டமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இது அகழ்வுப் பணிகளை குழப்புவதற்கான, அகழ்வுப் பணியில் ஈடுபட்டுள்ளோரை அச்சுறுத்தும் வகையிலான திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலாக அமையக்கூடும் என்ற சந்தேகம் வலுப்பெற்றுள்ளது.

செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி அகழ்வின் இரண்டாம் கட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் தாய் சேய், சிறுவர்கள், குழந்தைகள், புத்தகப்பை, சிறுவர்கள் விளையாடும் பொம்மை, சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு புதைக்கப்பட்ட ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்த மனித என்புக் கூட்டுத் தொகுதிகள் என ஒவ்வொரு நாள் அகழ்வும் தமிழ் மக்கள் மீது தொடுக்கப்பட்ட கொடூரத்தின் உச்சத்தைப் பறை சாற்றும் நிலையில் அவை சர்வதேச ரீதியில் பாரிய அதிர்வலைகளைத் தோற்றுவித்துள்ளன.

இந்நிலையில் இவ் அகழ்வுகளினை குழப்பவும் உண்மையை மழுங்கடிக்கவும் சில கடும்போக்குவாதிகள் முயற்சித்து வருகின்றனர்.

இவ்வாறான பின்னணியில் கடந்த 29 ஆம் திகதி அகழ்வுப் பணிகளுக்குச் சம்பந்தப்படாத குறித்த மர்ம வாகனத்தின் வருகையானது திட்டமிடப்பட்ட செயலா? வாகனத்தில் வந்தவர்கள் யார்? அகழ்வுப் பணிகள் இடம்பெறும் மயானத்தின் வாயில் வரை சென்றுள்ள குறித்த மர்ம வாகனத்தில் இருந்தவர்களால் யாதேனும் ஆதாரங்கள், புகைப்படங்கள் சேகரிக்கப்பட்டனவா? உள்ளிட்ட பல்வேறு சர்ச்சையினையும் கேள்விகளையும் தோற்றுவித்துள்ளதுடன் மனிதப் புதைகுழி அகழ்வின் பாதுகாப்பையும் கேள்விக்குறியாக்கியுள்ளது. (ம-7,104)

# 2.5 மில்லியன் டொலர்கள்

## இலங்கைக்கு ஜப்பான் வழங்கியது

ஊழல் எதிர்ப்பு வழிமுறைகளை வலுப்படுத்தவும், பொது நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை ஊக்குவிக்கவும் ஐக்கிய நாடுகள் சபையின் மேம்பாட்டுத் திட்டத்துடன் (UNDP) மூன்று ஆண்டுத் திட்டத்தை செயற்படுத்த ஜப்பான் அரசு 2.5 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது.

ஊழல் எதிர்ப்பு பொறிமுறையை நிறுவுவதன் மூலம் ஊழல் நடைமுறைகளைக் கையாள்வதற்கான ஒரு பொறிமுறையை நிறுவுவது தொடர்பாக இந்தத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. (ம-7)

# வவுனியாவில் இளைஞன் கடத்தப்பட்டுத் தாக்குதல்

## யாழைச் சேர்ந்த மூவர் கைது

(வவுனியா)

யாழில் இருந்து வருகை தந்து, வவுனியா இளைஞன் ஒருவரைத் தாக்கி அவரிடம் இருந்து 50 ஆயிரம் ரூபாய் பணத்தையும் பறித்துச் சென்ற குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா குற்றத் தடுப்புப்பிரிவு பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் - மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த மூவர் கார் ஒன்றில் கடந்த வெள்ளிக்கிழமை வவுனியாவிற்கு வருகை தந்து வவுனியா, புதிய பேரூந்து நிலையம் முன்பாக நின்ற இளைஞன் (வயது - 18) ஒருவரை காரில் கடத்திச் சென்று குடியிருப்பு குளக் கட்டுப் பகுதியில் வைத்து குறித்த இளைஞன் மீது தாக்குதல் நடத்தி விட்டு அவரது வங்கி அட்டையைப் பறித்து 50 ஆயிரம் ரூபாய் பணமும் பெற்று விட்டு தாக்குதலுக்குள்ளான இளஞனை புதிய பேரூந்து நிலையம் முன்பாக இறக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட இளைஞன் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸில் செய்த முறைப்பாட்டுக்கமைய வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயக்கொடி அவர்களின் வழி நடத்தலில் வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ஹேமந்த டீ சில்வா தலைமையில் பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளையடுத்து யாழ்ப்பாணம் மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த 19, 21 மற்றும் 19 வயது இளைஞர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்

மேலதிக விசாரணைகளின் பின் அவர்களை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,250)


உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

அன்பு வாசகர்களே!

உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரது உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

தொடர்புகளுக்கு :

தொலைபேசி:

076 097 3127

021 221 7603

/ -076 636 3378

E.mail: Valampurii@yahoo.com


# பூநகரி வாகன விபத்தில் படுகாயமடைந்தவர் மரணம்

(மாரவில)

பூநகரியில் நேற்று முன்தினம் இடம்பெற்றற வான் - மோட்டார்சைக்கிள் விபத்தில் ஐவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் மிருசுவிலைச் சேர்ந்த 27 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

பிரஸ்தாப நபரை மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் கொண்டு செல்லப்படும் வழியில் அபாய கட்டத்தை அடைந்தமையால் உடனடியாக மாரவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை விபத்துத் தொடர்பில் வானின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் பூநகரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,316)


கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்

திரு செ.திருவிளங்கம்

அவர்களின் மாமியார்

கனகலிங்கம் சரோஜாதேவி



அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் உறவுகளுக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தோற்றம் 15.05.1945 மறைவு 28.06.2025

ஆசிரியர் நலன்புரிக் கழகம்

யா/ஏழாலை மகா வித்தியாலயம்

(C-3319)



வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378,

076 097 3127


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சட்டங்கள் வலுப்படுத்தப்பட்டு இனவாதம் தோற்கடிக்கப்படும்!



(கொழும்பு)

**எந்த சூழ்நிலையிலும் இனவாதத்தை மீண்டும் தலைதூக்க அனுமதிக்கப்படமாட்டாது என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

கல்னேவ மகாவலி விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனை குறிப்பிட்டுள்ளார்.

அதன்போது, சில அரசியல் குழுக்கள் அதிகாரத்தை கைப்பற்ற இனவாதத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தியதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, பாதிக்கப்பட்டவர்கள் அரசியல்வாதிகள் அல்ல, மாறாக வடக்கு மற்றும் தெற்கில் உள்ள அப்பாவி பெற்றோரின் பிள்ளைகள் என்றும் தெரிவித்தார்.

எனவே, இனவாதத்தை நிராகரித்து தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், அனைவருக்கும் ஜனநாயக ரீதியாகவும் சுதந்திரமாகவும் செயற்பட வாய்ப்பு இருந்தாலும், எந்த சூழ்நிலையிலும் இனவாதம் மீண்டும் தலைதூக்க அனுமதிக்கப்படாது என்றும் ஜனாதிபதி வலியுறுதியுள்ளார். இதேவேளை, தற்போதுள்ள சட்டங்கள் அதற்கு போதுமானதாக இல்லாவிட்டால், சட்டங்கள் வலுப்படுத்தப்பட்டு இனவாதம் தோற்கடிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சிங்களவர்கள், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றாக வாழும் ஒரு சமூகத்தை உருவாக்குவதே தனது அரசாங்கத்தின் நோக்கம் என்றும் ஜனாதிபதி அநுர மேலும் வலியுறுத்தியுள்ளார். (நி)

---

## சிரேஷ்ட பிரஜைகளுக்கான வங்கி வட்டி வீதம்

**சிறப்புத்திட்டம் குறித்து நிதி அமைச்சு அறிவிப்பு**

(கொழும்பு)

12 மாத நிலையான வைப்புத் தொகைகளுக்கு 3% அதிக வட்டி வழங்கும் சிரேஷ்ட பிரஜைகளுக்கான சிறப்பு வட்டி திட்டம் நேற்று முதல் நடைமுறைக்கு வருவதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது. 2025 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டங்களின் கீழ் இந்த திட்டத்திற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த திட்டம் சிரேஷ்ட பிரஜைகளுக்கு அவர்களின் நிலையான வைப்பு சேமிப்பில் மேம்பட்ட வருமானத்தை வழங்குவதன் மூலம் மேலதிக நிதி ஆதரவை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்று நிதி அமைச்சு ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அதிக வாழ்க்கைச் செலவு, குறைக்கப்பட்ட சந்தை வட்டி விகிதங்கள் மற்றும் சிரேஷ்ட பிரஜைகள் எதிர்கொள்ளும் நிதி சவால்கள், குறிப்பாக சுகாதாரச் செலவுகள் போன்ற அத்தியாவசிய செலவுகளை நிர்வகிப்பதில் உள்ளிட்ட பல முக்கியமான காரணிகளுக்கு பதிலளிக்கும் விதமாக நிவாரணம் வழங்க முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, சிரேஷ்ட பிரஜைகளுக்கான சிறப்பு வட்டித் திட்டம் 60 வயது அல்லது அதற்கு மேற்பட்ட இலங்கை குடிமக்களுக்கானது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் நிலையான வைப்புத்தொகைகளை ஜூலை 1, 2025 முதல் டிசெம்பர் 31, 2025 வரையிலான காலகட்டத்தில் திறக்கலாம். மேலும் அத்தகைய அனைத்து வைப்புத்தொகைகளும் 12 மாத நிலையான வைப்புத்தொகை காலத்தைக் கொண்டிருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. பங்கேற்கும் வங்கிகளின் எண்ணிக்கையைப் பொருட்படுத்தாமல், இந்தத் திட்டத்தின் கீழ் வைப்புத்தொகைகளின் மொத்த மதிப்பு ஒரு வைப்புத் தொகையாளருக்கு 1 மில்லியன் ரூபாவுக்கு அதிகரிக்காமல் இருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

---


## எரிவாயு விலைகளில் மாற்றமில்லை

**லிட்ரோ, லாஃப்ஸ் நிறுவனங்கள் அறிவிப்பு**

(கொழும்பு)

2025 ஜூலை மாதத்திற்கான உள்நாட்டு சமையல் எரிவாயு விலையில் திருத்தமில்லை என எரிவாயு நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

கடந்த மே மாதத்திலும் விலைகள் மாறாமல் இருந்தன. அதேபோல் ஜூலை மாதத்திற்கான உள்நாட்டு சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலையில் எந்த திருத்தமும் இருக்காது என்றும் லாஃப்ஸ், லிட்ரோ நிறுவனங்கள் அறிவித்துள்ளன. (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையான பயங்கரவாதிகளின் கோரமுகம் வெளிப்பட்டுள்ளது!

## செம்மணி புதைகுழி தொடர்பில் தென்னிந்திய திரைப்பட இயக்குநர் கௌதமன் அறிக்கை



**(சென்னை)**

**எமது ஈழ மண்ணின் உண்மையான பயங்கரவாதிகள் யார் என்பதை யாழ்ப்பாணம் - செம்மணி சித்துப்பாத்தியில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியானது இவ்வுலகிற்கு பட்டவர்த்தனமாக அம்பலப்படுத்தி விட்டது என தென்னிந்திய பிரபல இயக்குனரும் தமிழ்ப் பேரரசு கட்சியின் நிறுவனருமாகிய வ.கௌதமன் தெரிவித்துள்ளார்.**

ஊடக அறிக்கை ஒன்றின் மூலம் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் இரண்டாவது கட்ட அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. நேற்று முன்தினம் வரையான அகழ்வுகளின்போது 33 எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட பல எலும்புக்கூடுகள் கொடூர கொலை இடம்பெற்றதை ஆதாரப்படுத்துகின்றது.

தாய் ஒருவர் சேயை அணைத்தவாறு ஒரு எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்டது. அத்துடன் சிறுவன் ஒருவனது எலும்புக்கூடானது புத்தகப் பையுடன் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த ஆதாரங்களானது கடந்தகால அரசுகளின் கோர முகத்தை வெளிப்படுத்துகிறது.

எங்கள் மக்களின் விடியலுக்காகவும், எம் மண்ணின் விடுதலைக்காகவும் போராடிய விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் என்றார்கள். எம் தமிழ் மக்களையும் பயங்கரவாதிகளாக தென்னிலங்கை தேசத்துக்கு எடுத்துக் காட்டினார்கள். உண்மையான பயங்கரவாதிகள் யார் என்பதை இப்போது உலகம் அறிகிறது.

இதுவரை 33 எலும்புக்கூடுகளே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. குறித்த பகுதியில் 600 இற்கு மேற்பட்டோரது எலும்புக்கூடுகள் இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. மீட்கப்பட்ட 33 எலும்புக்கூடுகளிலேயே இத்தனை கொடூரங்கள் வெளிப்பட்டுள்ள நிலையில் மீதமுள்ள எலும்புக்கூடுகளில் இன்னமும் எத்தனையெத்தனை குரூரங்கள் இருக்குமோ என நினைக்கும்போது நெஞ்சம் பதைபதைத்து. அடி வயிறே பற்றியெரிகிறது.

யுத்தம் நிறைவுற்று 16 ஆண்டுகள் கழிந்துள்ள நிலையில் காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகள் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். போராட்டங்களில் ஈடுபட்ட பலர் தமது பிள்ளைகளுக்கு அல்லது தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்று தெரியாமலே வயது மூப்பினாலும் பல்வேறு காரணங்களாலும் உயிரிழந்துள்ளார்கள். காணாமல் ஆக்கப்பட்ட தமது சொந்தங்களுக்கு என்ன நடந்தது என்ற விடயத்தையாவது ஏனைய உறவுகள் தமது வாழ்க்கை காலத்தில் தெரிந்துகொள்ள வேண்டும்.

யுத்தம் நிறைவுற்று 16 ஆண்டுகள் கழிந்துள்ள நிலையிலும் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் ஏன் இந்த விடயங்களை அம்பலப்படுத்தவில்லை? இதிலேயே தெரிகிறது அவர்களது இனவாத முகம்.

என்னதான் மூடி மூடி மறைத்தாலும் உண்மைகள் எப்போதும் உறங்காது என்பதற்கு செம்மணிப் புதைகுழி ஒரு மிகச் சிறந்த உதாரணம்.

கடந்த காலத்தில் மோசடிகளில் ஈடுபட்ட அமைச்சர்களையும் அதிகாரிகளையும் தற்போதை அநுர அரசு தண்டிக்கிறது. அதனை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால் இந்த செம்மணி புதைகுழி விவகாரத்தில் அவர்களும் இனவாத கொள்கையில் செயற்படுகின்றார்களா? அல்லது அனைத்து இனங்களையும் சமமாக வழி நடத்துகின்றார்களா என்ற விடயம் இனிவரும் அவர்களது செயற்பாட்டில் உறுதியாக தெரியவரும்.

பாதிக்கப்பட்ட எமது தொப்புள் கொடி உறவுகளுக்கு நீதி கிடைக்கும் காலம் கனிந்து வருகிறது என எனக்கு தோன்றுகிறது. இதனை நல்ல வாய்ப்பாக பயன்படுத்தி சர்வதேச சமூகங்களும், புலம்பெயர் உறவுகளும், தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகளும் ஓரணியில் நின்று இலங்கை அரசாங்கத்தின் மீது ஆக்கப்பூர்வமான அழுத்தங்களை கொடுத்து பாதிக்கப்பட்ட எமது உறவுகளுக்கு நீதிகிடைப்பதற்கு வழிசமைக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட உறவுகளுக்கான நீதி கிடைப்பதற்கு தொப்புள் கொடி உறவுகளாக நாம் எப்போதும் இறுக கைப்பற்றி தோளோடு தோள் நிற்போம். அறம் வெல்லும். வெல்வோம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# சிங்களவர்களுக்கு இனவாத முத்திரை குத்தும் அநுர அரசாங்கம்

## சரத் வீரசேகர சீற்றம்

(கொழும்பு)

இலங்கை சிங்கள, பௌத்த நாடாக இருந்தபோதிலும் அதிகாரத்துக்காக தற்போதைய அரசாங்கம் பெரும்பான்மை இனத்தைக் காட்டிக்கொடுத்துள்ளது என முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் 25 ஆயிரம் வரையிலான சிங்கள குடும்பங்கள் இருந்தன. இன்று ஒருவர் கூட இல்லை. மட்டக்களப்பிலும் சிங்களவர்கள் இல்லை.

கொழும்பில் முஸ்லிம் மற்றும் தமிழர்களே வர்த்தகத்தை நிர்ணயிக்கின்றனர். இதற்கு சிங்களவர்கள் தடை ஏற்படுத்துவதில்லை. நிலைமை இப்படி இருந்தும் சிங்களவர்களுக்கே இனவாத முத்திரை குத்தப்படுகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இராணுவ அமைப்பு மற்றும் தேசியவாத அமைப்புகளுடன் சந்திப்பு நடத்தவில்லை. தமிழ்ப் பிரிவினைவாதிகளை மட்டுமே சந்தித்தார்.

இரு தரப்புகள் இருப்பதை அரசாங்கம் அவருக்கு சுட்டிக் காட்டி இருக்க வேண்டும். ஆனால் அது நடக்கவில்லை .

இலங்கையென்பது சிங்கள, பௌத்த நாடாக இருந்த போதிலும் பெரும்பான்மை இனமான சிங்கள மக்களுக்கே அநீதி இழைக்கப்படுகின்றது என அவர் தெரிவித்தார். (நி)

# இராசிபலன்

02.07.2025
ஆனி 18, புதன்கிழமை
சப்தமி பிற்பகல் 2.47 மணிவரை
உத்தரம் பிற்பகல் 2.12 மணிவரை

சுப நேரம் 4.26-5.56 மணிவரை
இராகுகாலம் 11.56-1.26 மணிவரை
உதயம் ஆனிஉத்தர தரிசனம்

சந்திராஷ்டமம்
அவிட்டம், சதயம்

வளவன்

**மேஷம்** – தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

**கடகம்** – புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், உறவினர்கள் உங்களின் கருத்துக்களை ஏற்று நடப்பர், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், வருமானம் திருப்தி தரும்.

**துலாம்** – பணப்புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

**மகரம்** – மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், ஆன்றோர்கள் சந்திப்புண்டு.

**ரிஷபம்** – அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், மன மகிழ்ச்சியோடு செயற்படுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிம்மம்** – புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்** – எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும் நாள்.

**கும்பம்** – உடல் நலனில் கவனம் தேவை, நிதானத்துடன் நடந்து நிம்மதி காண வேண்டிய நாள், குடும்ப பொறுப்புக்கள் கூடும், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம்.

**மிதுனம்** – தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கன்னி** – பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், புதிய அனுபவங்கள் ஏற்படலாம், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**தனுசு** – பொது நல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், குடும்ப ஒற்றுமை கூடும், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், செய்தொழிலில் உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்.

**மீனம்** – வழிபாடு விருப்பத்தை நிறைவேற்றும், சொந்த பந்தங்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

உன்னை விடக் குறைந்து யாரையும் எடை போட்டு விடாதே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அதிக விலைக்கு அரிசி விற்றால் அபராதத்துடன் சிறைத்தண்டனை

## நுகர்வோர் அதிகாரசபை எச்சரிக்கை

(கொழும்பு) ..............................

**வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அதிக பட்ச சில்லறை விலையை விட அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்தால் அபராதமுடன் சிறைத் தண்டனையும் விதிக்கப்படும் என்று நுகர்வோர் விவகார அதிகார சபை எச்சரித்துள்ளது.**

இது தொடர்பில் நுகர்வோர் விவகார அதிகாரசபை அறிக்கையொன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளது. அந்த அறிக்கையில் உள்ளதாவது,

அதிகபட்ச சில்லறை விலையை விட அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் பின்வரும் தண்டனைகள் போன்ற கடுமையான சட்டநடவடிக்கைகளை எதிர்கொள்ள நேரிடும்.

அதன்படி, உரிமையாளர்களுக்கு அதிகபட்ச சில்லறை விலையை விட அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்தால் குறைந்தபட்சமாக 100,000 ரூபா அபராதமும் அதிக பட்சமாக 500,000 ரூபா அல்லது 6 மாத சிறைத் தண்டனை அல்லது இரண்டும் விதிக்கப்படும். தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனங்கள் அல்லது நிறுவனங்களுக்கு குறைந்தபட்சமாக 500,000 ரூபா அபராதமும் அதிகபட்சமாக 5,000,000 ரூபா அபராதமும் விதிக்கப்படும்.

மேலும், அதிகபட்ச சில்லறை விலையை விட அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் குறித்து நுகர்வோர் விவகார அதிகாரசபை இன் 1977 என்ற துரித எண் மூலம் பொது மக்களை தகவல் தெரிவிக்குமாறு வலியுறுத்தப்படுகின்றது என்றுள்ளது. (நி)

# பாடசாலை வான் கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாது

## பாடசாலை போக்குவரத்து சங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

ஒரு லீற்றர் டீசலின் விலை 15 ரூபாவால் அதிகரித்தாலும், பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வான் கட்டணம் அதிகரிக்கப்படாதென இலங்கை பாடசாலை போக்குவரத்து சங்க தலைவர் மல்ஸ்ரீ டி சில்வா தெரிவித்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் வான் கட்டணம் அதிகரித்தால், மாணவர்களின் எண்ணிக்கையும் குறையும்.

மின்சாரம் மற்றும் தண்ணீர் கட்டணங்களை செலுத்த முடியாத பெற்றோருக்கு மேலும் சுமையை ஏற்படுத்த முடியாதென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)


## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை,வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை வெளிநாடு செல்ல தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

தொடர்புகளுக்கு-**076 682 7368**

No.139, Main Street Jaffna.
**யாழ்.நீதிமன்றத்துக்கு அருகாமையில்**
**(முன்பதிவு செய்து வரவும்)** (4678)



## மணிவிழா வாழ்த்துக்கள்

**திரு.சோமசுந்தரம் - மோகனதாஸ்**
(H.N.D.A, B.com, sp.Trd - commerce , PGDE)




**சேவை விபரம்**

யா/உசன் இராமநாதன் ம.வி (ஆசிரியர்) - 17.08.1988 - 26.01.1992
யா/பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை- (ஆசிரியர் பயிற்சி) - 27.01.1992 - 31.12.1993
யா/உசன் இராமநாதன் ம.வி (ஆசிரியர்) - 01.01.1994 - 31.01.1994
யா/கச்சாய் ம.வி -(ஆசிரியர்) - 01.02.1994 - 28.06.1998
யா/உயர் தொழில் நுட்ப நிறுவனம் (ATI)
பகுதிநேர விரிவுரையாளர் - 01.01.1995 - 31.12.2000
யா/மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய ம.வி- (ஆசிரியர்) - 29.06.1998 - 31.12.2010
கிளி/பூநகரி மத்திய கல்லூரி - (ஆசிரியர்) - 01.01.2011 - 31.12.2012
யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி-(ஆசிரியர்) - 01.01.2013 - 25.03.2021
யா/மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய ம.வி -(ஆசிரியர்) - 26.03.2021 - 05.12.2021
யா/ மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்- ஆசிரியர் - 06.12.2021 - இன்று வரை

எமது பாடசாலையில் வர்த்தக பாட ஆசிரியராக கடமையாற்றி இன்று 02.07.2025 புதன்கிழமை ஒய்வு பெற்றுச் செல்லும் ஆசிரியர் திரு.**சோமசுந்தரம்– மோகனதாஸ்** அவர்களுக்கு எமது மணிவிழா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
(F-8315)

வாழ்த்துவோர் - ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/ மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்.



## சேவைநலன் பாராட்டு
## மணிவிழா வாழ்த்து

60 YEARS




செல்வி
**யசோதராதேவி ஏரம்பமூர்த்தி**
(SLTSI, ஆரம்பப்பிரிவு பகுதித் தலைவர்)

**சேவை விபரம்**
(வருடம் 36, மாதம் 10, நாள் 16)

- சேவை முன்பயிற்சி (யா/கனகரட்ணம் ம.ம.வி) - (17.08.1998 - 06.09.1988 )
- யா/அல்வாய் அம்பாள் வித்தியாலயம் - (21.10.1988 - 19.01.1992)
- யா/கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை - (20.01.1992 - 31.12.1993)
- யா/அம்பன் அ.மி.த.க. பாடசாலை - (01.01.1994 - 31.12.1997)
- யா/தும்பளை சிவப்பிரகாச ம.வி - (01.01.1998 - 02.02.2010)
- யா/பரு. சித்திவிநாயகர் வித்தியாலயம் - (03.02.2010 - 10.02.2015)
- யா/தும்பளை சிவப்பிரகாச ம.வி - (11.02.2015 - 02.07.2025)

எம் வித்தியாலய ஆரம்பப்பிரிவின் தூணாய்
சின்னஞ்சிறார்கள் மனதில் நீங்காத தடமாய்
எங்கள் நாட்களில் நீங்காத அன்பாய்
எம் பாடசாலையில்
இருபத்து இரண்டரை வருடம்
ஆசிரிய பணியில் முப்பத்தாறு வருடம்
தாண்டிய அருஞ்சேவையாய்
உழைத்து ஓய்வு பெறும் நீங்கள்...
நீண்ட ஆயுளும், நிறைந்த சுகமும், நிறைந்த அமைதியோடும்
நீடு வாழ மணி விழா நன்னாளில் வாழ்த்தி மகிழ்கின்றோம்.

(4661)

வாழ்த்துவோர்-
அதிபர், ஆசிரியர் பணியாளர் நலன்புரிச் சங்கம்,
யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம், பருத்தித்துறை.



## ராஜ் ஜுவல்லர்ஸ்

**நகை அடகுபிடிக்கும் சேவை**

வட்டி வீதம் குறைக்கப்பட்டுள்ளது

**1 பவுண் 22 கரட்டிற்கு**




**2,20,000/=**

**அடகுக்காலம் ஒருவருடம்**

இல.59, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி சந்தைக்கு அருகில்
021 221 7287 / 076636 1238


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வரலாற்று சிறப்பு மிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்திர மகோற்சவத்தின் 5 ஆம் திருவிழாவான நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு நாகபூசணி அம்மன் முத்து சப்பரத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்தார். (படம்:சிவசாந்தன்)





மன்னார் நகரில் அமைந்திருந்த தந்தை செல்வாவின் உருவச்சிலை கடந்த வாரம் இனம் தெரியாத நபர்களினால் உடைக்கப்பட்ட நிலையில் குறித்த உருவச்சிலை இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளையின் ஏற்பாட்டில் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

(படம்:ஜோசப்நயன்)




தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அமைதி விருதுகள் விழா கடந்த ஞாயிற்றுக் கிழமை தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.



வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் நெய்தல் முன்பள்ளியின் "செயற்பட்டு மகிழ்வோம் 2025" நிகழ்வு கடந்த 26 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்றது. (படம்: சிவசாந்தன்)



கடந்த ஜூன் மாதம் 26 ஆம் திகதி வியாழக்கிழமையன்று. அச்சுவேலி மத்திய கல்லூரி சமூகத்தால் டெங்கு ஒழிப்பதற்கான சிரமதான நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில், மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பிற ஊழியர்கள் ஊக்கத்துடன் பங்கேற்று, பள்ளி வளாகத்தையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும் சிரமதானம் செய்தனர்.



சுகாதார மேம்பாட்டை நோக்கிய பயணத்தில் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையின் பொது வைத்திய நிபுணர் செல்லதுரை பிரசாத் எழுதிய உயர் குருதி அமுக்கம் என்னும் பொதுமக்களுக்கான ஓர் வழிகாட்டி நூல் பருத்தித்துறை சூரிய மஹால் மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியீட்டு வைக்கப்பட்டு இலவசமாக வழங்கப்பட்டது.


பல ஆயிரம் கடந்த பதிவுகள்...

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்

உங்கள்

கல்யாண மாலை

(சர்வதேச இலவச திருமண சேவை)

உலகின் எப்பாகத்திலிருந்தும் தொடர்புகொள்ள

www.kalyanamalai.lk

இணையத்தளத்தைப் பாருங்கள்

பதிவுக்கட்டணம் : 4000/= மட்டும்



தொடர்பு - கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 720 1005
076 097 3120
Email : Kalyanamalai.jaffna@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம் வெளிநாடு

## உணவுக்காக காத்திருந்த

# காசா மக்கள் மீது இஸ்ரேல் தாக்குதல்!

## அப்பாவிப் பொதுமக்கள் பலர் உயிரிழப்பு

(காசா)..................................

**உணவுக்காக காத்திருந்த காசா மக்கள் மீது இஸ்ரேல் இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் அப்பாவிப் பொது மக்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.**

பாலஸ்தீனத்தின் காசா முனை மீதான இஸ்ரேலின் போர் 2ஆவது ஆண்டை நெருங்கி உள்ளது. இந்நிலையில் காசா நகரில் உள்ள அல்-பக்கா கபே உணவகத்தில் உணவுக்காக பெண்கள், சிறுவர்கள் உட்பட பலர் காத்திருந்தனர்.

அப்போது அங்கு இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தியது.

இதில் 30 பேர் உயிரிழந்தனர். வேறு இடங்களிலும் உணவுக்காக காத்திருந்தவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 23 பேர் பலியானார்கள்.

அதேபோல் தெற்கு காசாவில் உணவு தேடி வந்த 11 பேரை இஸ்ரேலிய படைகள் கொன்றதாக காசா சுகாதார அமைச்சகம் தெரிவித்தது. (நி)



## மீண்டும் திறக்கப்பட்டது பிரேசிலின் அருங்காட்சியகம்



(ரியோ டி ஜெனீரோ)

பிரேசிலின் ரியோ டி ஜெனீரோ நகரில் 2018 - ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரும் தீவிபத்தில் கடுமையாக சேதமடைந்த தேசிய அருங்காட்சியகக் கட்டடம், சீரமைப்பு பணிகளுக்குப் பின்னர் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

இந்த அருங்காட்சியகம், பிரேசிலின் மிகப் பழமையான அறிவியல் மற்றும் பண்பாடு சார்ந்த பல விடயங்களை உலகிற்கு பறைசாற்றும் விதத்தில் அமைந்துள்ளது.

தீவிபத்தில் சுமார் 20 மில்லியன் வரலாற்று மற்றும் பழமையான பொருட்கள் சேதமடைந்தன.

இதனைத் தொடர்ந்து, சுமார் 95 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் சீரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

மீட்கப்பட்ட முக்கியமான பொருட்களில், 5.6 தொன் எடையுள்ள "பென்டெகோ" எனப்படும் விண்கல் மற்றும் "லூசியா" என அழைக்கப்படும் பழமையான மனித உடற்கூறு பாகங்கள் இடம் பெற்றுள்ளன.

பிரேசிலின் கலாசார அடையாளமாகவும், அறிவியல் ஆய்வுகளுக்கான முக்கிய மையமாகவும் இந்த அருங்காட்சியகம் மீண்டும் உருவெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## குழந்தைகளைவிட ஜப்பானில் செல்லப்பிராணிகளே அதிகம்

### ஆய்வில் தகவல்



(டோக்கியோ)

ஜப்பான் நாட்டில், 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளைவிட செல்லப்பிராணிகளே அதிகம் இருப்பது சமீபத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

கிழக்கு ஆசிய நாடான ஜப்பான், தொழில்நுட்பம், பொருளாதாரம் உள்ளிட்டவற்றில் வேகமாக வளர்ந்தாலும், அங்கு குழந்தைகளின் பிறப்பு விகிதம் குறைந்துகொண்டே இருக்கிறது. கடந்த 16 ஆண்டுகளாக ஜப்பானில் குழந்தை பிறப்பு விகிதம் சரிந்த வண்ணம் உள்ளது. இதை, அவசர நிலை என பிரதமர் ஷிகேரு இஷிபா எச்சரித்த நிலையில், தற்போது வெளிவந்துள்ள புதிய தரவு மற்றொரு அதிர்ச்சியைத் தந்துள்ளது.

அது, ஜப்பானில் 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளைவிட செல்லப்பிராணிகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பது தான். அங்கு, 14 இலட்சம் குழந்தைகள் உள்ள நிலையில், நாய், பூனை உள்ளிட்ட செல்லப்பிராணிகள் எண்ணிக்கை 16 இலட்சமாக உள்ளது. கொரோனா காலக்கட்டத்திற்கு பிறகே இந்த எண்ணிக்கை வேகமாக உயர்ந்துள்ளது.

ஜப்பானில் தனியாக வசிக்கும் முதியோர், துணைக்கும், ஆறுதலுக்கும் செல்லப்பிராணிகளை அதிகம் வளர்ப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதேபோன்று பொருளாதாரம், சமூக காரணிகளால் ஏற்படும் மாற்றமும் குழந்தை பெற்றுக்கொள்வதை தவிர்த்து செல்லப்பிராணி வளர்ப்பில் ஆர்வம் காட்ட வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

விசுவாசத்திற்கு பெயர் பெற்ற நாய்கள், ஜப்பானிய வீடுகளின் ஒரு பகுதியாகவே எப்போதும் இருந்து வருகின்றன. அவற்றை குடும்ப உறுப்பினர்கள் போலவே நடத்துகின்றனர். (நி)

## ஸ்பெயினில் வாட்டி வதைக்கும் வெயில் - (மக்கள் அவதி)

(எல் கிரனாடோ)

தெற்கு ஐரோப்பிய நாடுகள், முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு வெப்ப அலையின் பிடியில் சிக்கி உள்ளன. ஸ்பெயினில், கடந்த 60 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அதிக வெப்பநிலை பதிவானது.

பருவநிலை மாற்றம், உலக நாடுகளை அச்சுறுத்தி வருகிறது. அந்தவகையில், ஐரோப்பிய நாடுகளை தற்போது வெப்ப அலை வாட்டி வதைத்து வருகிறது. இதில் அதிகம் பாதிக்கப்பட்டிருந்தது ஸ்பெயின்.

ஸ்பெயினில் உள்ள எல் கிரனாடோ நகரில், 46 டிகிரி செல்ஸியஸ் வெயில் நேற்று முன்தினம் பதிவானது. இது ஜூன் மாதத்தில் நாட்டில் பதிவான அதிகபட்ச வெப்பநிலையாகும். கடந்த, 1965இல் செவில்லே நகரில், 45.2 டிகிரி பதிவானதே அதிகபட்சமாக இருந்தது. போர்ச்சுக்கலில் வெப்பநிலை 43 டிகிரியை எட்டியது. (நி)


## மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 23 * 01 * 1944 |  | 29 * 06 * 2025 |

### வல்லி கந்தசாமி (பிரபல ஜோதிடர்)

மாவை கலட்டி, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **வல்லி கந்தசாமி (பிரபல ஜோதிடர்)** அவர்கள் **29.06.2025 ஞாயிற்றுக்கிழமை** இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம் சென்றவர்களான வல்லி சின்னத்தங்கச்சி தம்பதியினரின் அன்பு மகனும் காலம் சென்றவர்களான செல்லையா பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் சீனமணியின் பாசமிகு கணவரும் யாழினி (பிரான்ஸ்), மதனரூபன் (பிரான்ஸ்) கர்ஜின் ஆகியோரின் அன்புத் தந்தையும்.

சிறிகாந்தன், தனுஷ்ரா, சுகன்யா ஆகியோரின் அன்பு மாமனாரும் சேரநிலவன், சுவேதா, கனிஸ்ரன், அஷீஸ், அஸ்விதா, அஜீனா, அதிகன், ஆதனா ஆகியோரின் பாசமிகு பேரனும்.

காலம் சென்றவர்களான முருகையா, சுந்தரம் மற்றும் சிவபாக்கியம், கமலாதேவி, யோகராணி, பரராசசிங்கம் (பிரபல சித்த வைத்தியர் - மாவை கலட்டி) கலாராணி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் இரத்தினேஸ்வரி, இரத்தினம், நடேசன், சின்னத்துரை, பாசமலர், வரதராஜா (பிரான்ஸ்) மங்களம், சிவலிங்கம், தங்கமணி, ருக்குமணி, பத்மநாதன் ஆகியோரின் அன்பு மைத்துணருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.07.2025 இன்று புதன்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனம் கிரியைக்காக கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மாவை கலட்டி,**
**கொல்லங்கலட்டி,**
**தெல்லிப்பளை.**

**தகவல் - குடும்பத்தினர்**
**வ.பரராசசிங்கம்**
**(சகோதரன் - பிரபல சித்த வைத்தியர்)**
**தொ.பே - 0775 22 2528**

(T13313)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா பொருளாதார மத்திய நிலையம் மீள இயக்குவதற்கு தீர்மானம்

(வவுனியா)

வவுனியாவில் கட்டப்பட்டு மூடப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலையத்தை மீள இயக்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநரும், வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான நா.வேதநாயகன் மற்றும் கூட்டுறவுத்துறை பிரதி அமைச்சரும் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான உபாலி சமரசிங்க ஆகியோர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டச் செயலகத்தில் விசேட கூட்டம் நடைபெற்றது. பாராளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன், வவுனியா மாவட்டச் செயலாளர் பீ.ஏ.சரத்சந்திர, வவுனியா மாநகர சபை மேயர் சு.காண்டீபன், வவுனியா மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெ.ரதீஸ்வரன் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

2018ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு இன்னமும் திறக்கப்படாதுள்ள பொருளாதார மத்திய நிலையத்தை திறப்பது தொடர்பில் இதில் பிரதானமாக ஆராயப்பட்டது. வவுனியா நகரில் மொத்த மரக்கறி வியாபாரத்தில் ஈடுபடும் 37 வியாபாரிகளை முதல் கட்டமாக பொருளாதார மத்திய நிலையத்தினுள் வியாபாரத்துக்கு அனுமதிப்பது தொடர்பில் ஆராயப்பட்டது.

அதற்கு அமைவாக பொருளாதார மத்திய நிலையத்தை எவ்வளவு விரைவாக இயக்க முடியுமோ அவ்வளவு விரைவாக இயக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

மேலும் வவுனியாவில் குளங்களை சட்டவிரோதமாக ஆக்கிரமித்து காணிகளை கையகப்படுத்தியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க ஆளுநருக்குச் சுட்டிக்காட்டினார்.

வவுனியா நகரினுள் அமைந்துள்ள சட்டவிரோத கடைத்தொகுதிகள் தொடர்பிலும் கலந்துரையாடலில் ஆராயப்பட்டு அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. (8-250)

## சர்வதேச கூட்டுறவு தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை நடத்தும் 103 ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழா எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் ப.கேசவதாசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, சிறப்பு விருந்தினராக வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமாகிய ந.திருலிங்கநாதன், கௌரவ விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் கூட்டுறவாளர் உரையினை வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி பணிப்பாளர் க. சுசீந்திரனும் சிறப்புரையினை வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி தலைவர் அ.கதிர்காமர் நிகழ்த்தவுள்ளனர். (3)

## பட்டப்பகலில் வீடு புகுந்து கொள்ளை மூவர் பொலிஸாரால் கைது



(வவுனியா)

வவுனியாவில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, கற்குழி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வசித்து வந்தவர்கள் வெளியில் சென்ற சமயம் பட்டப்பகலில் வீடு புகுந்து சிலிண்டர், லப்டொப், ரப், கைத்தொலைபேசி, தொலைபேசி, தொலைக்காட்சி போன்ற பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டிருந்தன.

அதில் தொலைபேசி, லப்டொப் என்பன தேக்கவத்தை விளையாட்டு மைதானத்தில் இருந்த போது அப்பகுதியூடாக சென்றவர்கள் அதனை எடுத்து வவுனியா பொலிஸில் ஒப்படைத்தனர். இதனையடுத்து வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ஹேமந்த டீ சில்வா தலைமையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். அத்துடன் பாதிக்கப்பட்டவர்களும் பொலிஸில் முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து, 32 ,28,21 வயதுடைய மூன்று பேர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன் திருடப்பட்ட பொருட்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றின் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (8-250)

## கரியபுலத்தில் அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி கரியபுலம் அருள்மிகு ஸ்ரீ ஞான வைரப் பெருமான் ஆலய அலங்கார உற்சவப் பெருவிழா கடந்த ஜூன் மாதம் 3 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை முதல் இன்று புதன் கிழமை வரை நடைபெற்று வருகிறது.


இன்றைய தினம் புதன் கிழமை காலை 10 மணி முதல் 108 சங்காபிஷேக பெரு விழாவும் அதனைத் தொடர்ந்து அன்னதானம் வழங்கும் நிகழ்வும் இடம் பெறவுள்ளதென ஆலய தர்மகர்த்தா ஆ.விஜயமாலினி அறிவித்துள்ளார். (3)

## தொழிற்பயிற்சி கற்கைநெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையானது 2025 ஆம் ஆண்டு இரண்டாம் அரையாண்டிற்கான முழு நேர கற்கைநெறிகள் 01.07.2025 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இக்கற்கைநெறிகள் யாழ்ப்பாணம், கைதடி காரைநகர், வல்வெட்டித்துறை, பண்டத்தரிப்பு, சுன்னாகம் தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெற்று வருகின்றன.

தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியலாளர், மின்னிணைப்பாளர், கணிய அளவையியலாளர், விருந்தினர் வரவேற்பாளர், வெதுப்பாளர், சமையலாளர், நீர்க்குழாய் பொருத்துநர், முச்சக்கர வண்டி பொறிவலர், அலுமினியம் பொருத்துநர், உணவு மற்றும் குளிர்பானம் பரிமாறுபவர், குழந்தை பராமரிப்பாளர், பெண்கள் சிறுவர்களிற்கான ஆடை வடிவமைப்பாளர், சிகையலங்கரிப்பாளர், அழகுக் கலைவல்லுநர், விரைவு சேவை உணவு வழங்குநர், குளிரூட்டி மற்றும் வளி சீராக்கி திருத்துநர், மரவேலை தொழில் நுட்பவியலாளர், காய்ச்சி இணைப்பவர் (வெல்டர்), கட்டட நிர்மான உதவியாளர் போன்ற கற்கை நெறிகளிற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இக் கற்கை நெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை மட்டம் -4 (NVQ - 4) சான்றுதழுக்கான பயிற்சிநெறிகளாகும். கற்க விரும்புவோர் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 11.07.2025 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட அலுவலகம் 4ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம். இல 12 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம் அல்லது அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் மேற்கொள்ள முடியும். மேலதிக விபரங்களினை பெற்றுக் கொள்வதற்கு 021 222 7949, 071 031 87 37, 077 613 9307 எனும் தொலை பேசிஇலக்கங் களுடன் தொடர்பு கொள்ள முடியும் எனப் பிரதிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (8)



யாழ். வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா நேற்றைய தினம் பக்தி பூர்வமாக இடம் பெற்றது.

## விஷேட நுளம்புக் கட்டுப்பாட்டு வார நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

விஷேட நுளம்புக் கட்டுப்பாட்டு வார நிகழ்வு எதிர்வரும் 3 - 5ஆம் திகதி வரை மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசம் முழுவதிலும் மேற்கொள்ளப்படவுள்ளது. இதன் மூலமே அதிகரித்து வரும் டெங்கு பரவலிலிருந்தும் நோய்த்தாக்கத்திலிருந்தும் விடுபட முடியும்.

3, 4, 5 ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கும் இந்த விஷேட நிகழ்வு, அதன் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் அமைந்திட சகலரும் ஒத்துழைப்புகள் வழங்கி தங்கள் வாழிடங்கள், சமய நிறுவனங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுச்சந்தைகள், மயானங்களின் சுற்றுச் சூழலை துப்பரவாக வைத்திருக்கவும்.

இம்முறை டெங்கு பெருக்கத்திற்கு சாதகமான நிலைமைகள் காணப்படும் அனைத்து அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள், வீடுகள், மண்டபங்கள், ஆலயங்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே அனைவரும் தங்கள் சூழலை டெங்கு பெருகாதாவறு சுத்தமாக வைத்திருப்பதுடன் அன்றைய தினம் தங்கள் வீடுகளில் தரித்திருந்து களத்தரிசிப்பிற்கு வருபவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ் மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (8)

| இல | திகதி | பொது சுகாதார அதிகாரி பிரிவு | கிராம அலுவலர் பிரிவு | தொடக்க இடம் | கால அளவு |
|---|---|---|---|---|---|
| 01 | 03.07.2025 வியாழக்கிழமை | நாவாந்துறை | J/87 | நாவந்துறைபொதுச் சுகாதார அலுவலகம் | 10 |
| 02 | 04.07.2025 வெள்ளிக்கிழமை | குருநகர் | J/68, 69 | ஜூபிலி கிளினிக் மையம் | 10 |
| 03 | 05.07.2025 சனிக்கிழமை | கொழும்புத்துறை | J/63, 66 | பாஷையூர் மருத்துவ மையம் | 10 |

## போதனாசிரியர்களிற்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தொழிற்பயிற்சி அதிகார சபையின் தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள கற்கை நெறிகளிற்கான போதனாசிரியர்கள் வெற்றிடங்களிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வித்தகைமை:- க.பொ.த (சாதாரண தர) தமிழ், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

தொழில்சார் தகைமை:- மூன்றாம்நிலை தொழிற் கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் NVQ-4 உடன் NVQ-5 அல்லது அதற்கு மேல் தொழில் தகைமை சான்றிதழ் உடன் 1 வருடம் கற்பித்தல் அனுபவம்.

அனுபவம்:- சம்பந்தப்பட்ட துறையில் ஒரு வருடத்திற்கு மேலான தொழில்துறை அனுபவம். எனவே மேற்படி தகைமைகளுடைய ஆர்வமுடையவர்கள் தங்களுடைய விண்ணப்பத்தினை www.vtasl.gov.lk இணையத்தளத்தினூடாக 07. 07. 2025 ஆம் திகதிக்கு முன்னர் online ஊடாக விண்ணப்பிக்க முடியும் என பிரதிப்பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிப்புணர்வு செயலமர்வு

(கொழும்பு)

சித்திரவதையினால் பாதிக்கப்பட்டோருக்கு ஆதரவளிக்கும் சர்வதேச தினத்தை முன்னிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்ப்பாண அலுவலகமானது விழிப்புணர்வு செயலமர்வு ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

இந்த விழிப்புணர்வு செயலமர்வானது யாழ்ப்பாணம், காங்கேசன்துறை மற்றும் கிளிநொச்சி பொலிஸ் பிரிவுகளில் கடமையாற்றும் உயர் பொலிஸ் அதிகாரிகளுக்காக இன்று காலை 9 முதல் பிற்பகல் 12.30 வரை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய கேட்போர் கூடத்தில் நடத்தப்படவுள்ளது.

இந்த விழிப்புணர்வு செயலமர்வில் இலங்கை மனித உரிமைகள்ஆணைக் குழுவின்ஆணையாளர் பிரதான வளவளராக கலந்துக் கொண்டு கருத்துரை வழங்க உள்ளார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(8-104)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 350 | 250 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 450 | 400 | 700 | 500 | 600 |
| தக்காளி | 250 | 300 | 350 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 350 | 280 | 250 | 250 |
| கோவா | 350 | 450 | 400 | 300 | 400 |
| கரட் | 400 | 400 | 500 | 400 | 400 |
| பூசணி | 180 | 180 | 150 | 120 | 200 |
| புடோல் | 120 | 160 | 200 | 100 | 200 |
| வாழைக்காய் | 120 | 120 | 100 | 70 | 150 |
| சின்ன வெங்காயம் | 350 | 150-350 | 400 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 180 | 130 | 120 | 150 |
| பாகற்காய் | 650 | 650 | 700 | 450 | 800 |
| வெண்டக்காய் | 150 | 160 | 200 | 100 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 300 | 400 | 300 | 300 | 300 |
| லீக்ஸ் | 300 | 300 | 400 | 250 | 300 |
| பீற்றூட் | 250 | 300 | 350 | 250 | 250 |
| கறிமிளகாய் | 700 | 600 | 700 | 450 | 800 |
| முருங்கைக்காய் | 1000 | 1000 | 1000 | 800 | 1000 |
| போஞ்சி | 600 | 650 | 800 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | 350 | -- | 300 |
| கீரை – 1 பிடி | 120 | 40-100 | 200 | 60 | 80 |
| தேசிக்காய் | 350 | 300 | 350 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 250 | 80-160 | 150-200 |
| இராசவள்ளி | 650 | 650 | 600 | 500 | 700 |
| வெங்காயப்பூ | 600 | 600 | 600 | -- | 600 |
| முள்ளங்கி | 200 | 150 | 200 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 200 | 200 | 150 | -- | 200 |

## மக்கள் வங்கி
## பிராந்திய தலைமைக் காரியாலயம் - யாழ்ப்பாணம்

மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/ சேவை மையங்களில் 31.05.2024 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 04.08.2025 திகதி வரை மீட்டெடுக்கப்படாத / புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப் பட்டுள்ள திகதிகள் மற்றும் இடத்தில் காலை 8.30 மணிக்கு தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 05.08.2025 மற்றும் 06.08.2025**

| ஏல விற்பனை நிகழும் இடம் | யாழ் ஸ்ரான்லி வீதிக்கிளை |
|---|---|
| கிளைகள் | யாழ்/ ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்/ பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ்/பல்கலைக் கழகம், யாழ்/கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் |
| சேவை நிலையங்கள் | மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்யவும், ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்றவும், ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற் பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர், பிராந்திய தலைமைக் காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே.இல : 021-222 2601 : 021-222 2602**

(c- 3314)

PEOPLE'S BANK
Pride of the Nation

# வர்த்தக உலகம்

## LOLC- அல்-ஃபலாஹ் வதீ அஃஹ் தங்க ஆபரண காப்பக வசதி 3 பில்லியன் ரூபா சாதனையை படைத்துள்ளது


LOLC Finance நிறுவனத்தின் தங்கக்கடன்கள் பிரிவின் தலைவர் நிஷாந்த ஜய சேக்கர


LOLC அல்-ஃபலாஹ் பதில் நிதி சார்ந்த சேவைகள் பிரிவின் தலைவர் சிராஸ் ரிபாய்

LOLC Finance PLC நிறுவனத்தின் பதில் நிதி சார்ந்த சேவைகள் பிரிவான LOLC அல்-ஃபலாஹ், அதன் "வதீ அஃஹ் தங்க ஆபரண காப்பக வசதியை" 3 பில்லியன் ரூபாவை விஞ்சிய பயனுள்ள ரொக்க முற்பண சேகரிப்பையும் தாண்டி குறிப்பிடத்தக்க ஒரு சாதனையை அடைந்துள்ளதாக அறிவித்தது. "இந்த மகத்தான சாதனை இலங்கையில் பரிணமித்து வருகின்ற நிதி சார்ந்த சேவைகள் சூழ்நிலையில் நெறிமுறையான, வெளிப்படையான மற்றும் குறிக்கோள் வாய்ந்த நிதி சார்ந்த தீர்வுகளின் நிமித்தம் அதிகரித்து வருகின்ற கேள்வியை குறித்து நிற்பதாக" மேற்குறித்த இந்த நிறுவனம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.


பாரம்பரிய தங்கக் கடன் வசதிகளை அடையாளப்படுத்தும் முகமாக மாற்றுவழி சிறப்பம்சங்களை வழங்குகின்ற "வதீ அஃஹ் தங்க ஆபரண காப்பக வசதியை" ஆரம்பிக்கும் முகமாக இந்த LOLC Finance PLC நிறுவனம் நாட்டின் வங்கியியல் சாராத ஒரு முதல் நிதி நிறுவனமாக (NBFI) விளங்குகிறது. வாடிக்கையாளர்கள் இந்த வதீ அஃஹ் தங்க ஆபரண காப்பக வசதியில் தமது தங்கத்தை பாதுகாப்பாக வைப்புச் செய்யலாம். இது வைப்புச் செய்யப்படும் தங்க ஆபரணங்களின் சரியான எடை, தரம் மற்றும் பெறுமானம் என்பவற்றை தெளிவாக விவரிக்கின்ற செல்லுபடியாகும் ஒரு தங்க ஆபரண காப்பக சான்றிதழை வழங்கும். LOLC நிறுவனத்தின் வலுவான உட்கட்டமைப்புடன் இணைந்துள்ள இந்த வெளிப்படைத்தன்மை பாதுகாப்பு மற்றும் நெறிமுறையான நிதி சார்ந்த நடத்தை ஆகிய இரண்டையும் மதிக்கின்ற SME களும் மற்றும் நடுத்தர வருமானத்திலிருந்து குறைந்த வருமானம் வரையான பிரிவினர்களும் அடங்கலாக பெருமளவான மக்கள் மத்தியில் நம்பிக்கையைப் பெற்றுள்ளது.

பயனுள்ள முற்பண வசதியானது வதீ அஃஹ் தங்க ஆபரண காப்பக வசதியின் ஒரு முக்கிய தனித்துவமான சிறப்பம்சமாகும். இது குறிப்பாக தனிப்பட்ட அல்லது பொருளாதார நெருக்கடிகளின் போது தங்கத்தின் பெறுமதியில் வைப்பாளர்கள் 90% வீதம் வரை பெற அனுமதிக்கின்றது. நெறிமுறைகளில் எந்தவிதமான சமரசமும் இல்லாமல் வழங்கப்படும் இந்த வசதி வாடிக்கையாளர்களுக்கு மிகவும் தேவையானபோது அவர்கள் வைப்புச்செய்த சொத்துக்களின் பாதுகாப்பைப் பேணி முற்பண வசதியை வழங்குகின்றது. வைப்புச்செய்யப் படும் தங்கத்திற்கு எந்த சேதத்தையும் ஏற்படுத்தாத ஒரு அதிநவீன மதிப்பீட்டு செயல் முறைக்கு மேலதிகமாக, வதீ அஃஹ் தங்க ஆபரண காப்பக வசதிக்கு பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மை இரண்டிலும் வாடிக்கையாளர் நம்பிக்கையை வலுப்படுத்துகின்ற LOLC Finance PLC நிறுவனத்தின் நிறுவன வலிமையால் முழுமையாக ஆதரவளிக்கப்படுகின்றது.

LOLC அல்-ஃபலாஹ் பதில் நிதி சார்ந்த சேவைகள் பிரிவின் தலைவர் ஷிராஸ் ரிபாய் கூறுகையில், "இந்த 3 பில்லியன் ரூபா சாதனை வெறுமனே ஒரு இலக்கம் மட்டுமல்ல - இது எமது வாடிக்கையாளர்கள் எம் மீதும் எமது நிலையான நெறிமுறைக் கட்டமைப்பின் மீதும் வைத்திருக்கும் ஆழ்ந்த நம்பிக்கையின் பிரதிபலிப்பாகும். எமது வதீ அஃஹ் தங்க ஆபரண காப்பக வசதி கண்ணியத்தாலும் பாதுகாப்பாலும் அணுகலாலும் கட்டமைந் துள்ளது. மிகவும் பின்தங்கிய இலங்கையர்கள் கூட தமது நம்பிக்கையை இழக்காமல், நெறிமுறையற்ற நடைமுறைகளுக்கு ஆபத்தை விளைவிக்காமல் தமது சொத்துக்களை வைப்புச் செய்ய முடியும் என்பதற்கு உத்தரவாதமளிக்கின்றது

LOLC நிதி தங்கக் கடன்கள் பிரிவின் தலைவர் நிஷாந்த ஜயசேகர கூறுகையில், "வாதியாஹ் தங்க வைப்பு வசதியின் தொடர்ச்சியான வளர்ச்சி, பொறுப்பான நிதியியலில் புத்தாக்கத்திற்கான LOLC இன் அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும். எமது வாடிக்கையாளர்கள் நிதி உதவியை விடவும் மேலும் அதிகமானவற்றை எதிர்பார்க்கின்றார்கள்- அவர்கள் உத்தரவாதத்தையும், வெளிப்படைத்தன்மையும் மற்றும் மதிப்பையும் நாடுகின்றார்கள். பாரம்பரியத்தை நம்பிக்கையுடன் கலப்பதன் மூலம் வாதியாஹ் அதற்கு பதிலளிக்கின்றது. இலங்கையில் தங்கக் கடன் பிரிவில் நாம் தொடர்ந்து முதன்னிலை வகித்து வருவதால், எமது சேவையை எப்போதும் வரையறுத்துள்ள மானிடத் தொடர்பை பாதுகாத்து நேர்த்தியான தொழில்நுட்பம் சார்ந்த தீர்வுகளை ஒருங்கிணைப்பதே எமது குறிக்கோளாகும். இந்த 3 பில்லியன் ரூபா சாதனை நெறிமுறை தங்க ஆதரவு நிதியத்தில் ஒரு புதிய சகாப்தத்தின் ஆரம்பமாகும். LOLC அல்-ஃபலாஹ் வதீ அஃஹ் தங்க ஆபரண காப்பக வசதிகள் பிரிவின் வளர்ச்சியானது அது மாற்றுவழி நிதி சார்ந்த சேவைகளில் அதன் நிலையை உறுதிப்படுத்தி காலத்தால் அழியாத நெறிமுறை சார்ந்த விழுமியங்களின் அடிப்படையில் தனித்துவமான செழிப்புக்கான புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தித்தருகின்றது.

## கொமர்ஷல் வங்கி தனது முதல் மகளிர் வங்கி நிலையத்தை யாழ்ப்பாணத்தில் திறந்துள்ளது




கொமர்ஷல் வங்கியானது மகளிர் வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்வதற்காக அர்ப்பணிப்புள்ள பெண் ஊழியர்களால் நிர்வகிக்கப்படும் அதன் முதலாவது பிரத்தியேக மகளிர் வங்கி நிலையத்தை ஆரம்பித்துள்ளது. இது பெண்களின் தனித்துவமான தேவை களைப் பூர்த்தி செய்வதற்கான வங்கியின் உறுதிப்பாட்டை வலுப்படுத்துகிறது. அணகி மகளிர் வங்கி நிலையம்" என்று பெயரிடப்பட்ட இந்த நிலையமானது அண்மையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் இலக்கம் 474 இல் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கிளையில் திறந்து வைக்கப்பட்டது. பெண் வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட அணகி மகளிர் வங்கி நிலையம், தாய்மார்கள் பாலூட்டும் அறை, குழந்தைகள் விளையாடும் பகுதி, பிரத்தியேக அடகு பிரிவு, ஆலோசனை பிரிவு, சிற்றுண்டிச்சாலை உள்ளிட்ட சிறப்பு வசதிகளைக் கொண்டுள்ளது. மேலும், எந்தவொரு கொமர்ஷல் வங்கி கிளையிலும் வழங்கப்படும் முழு அளவிலான நிதி தயாரிப்புகள் மற்றும் சேவைகளையும் வழங்குகிறது.

அணகி மகளிர் வங்கி நிலையத்தின் திறப்பு விழாவில் கொமர்ஷல் வங்கியின் மனிதவள முகாமைத்துவ பிரதிப் பொது முகாமையாளர் திரு.இசுறு திலகவர்தன, சர்வதேச பிரதிப் பொது முகாமையாளர் திருமதி.தமாரா பேர்னார்ட், தனிநபர் வங்கியியல் பிரதிப் பொது முகாமையாளர் எஸ். கணேசன், இணக்கப்பாட்டுப் பிரிவு உதவிப் பொது முகாமையாளர் திருமதி.சாந்தனி சியம்பலகஸ்தென்ன மற்றும் மனித வள முகாமைத்துவத் தலைவர் திருமதி புஷ்பா சந்திரசிறி ஆகியோர் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண மட்ட பளுதூக்கல்

## 8 பதக்கங்களை கைப்பற்றியது மகாஜனா



மாகாண மட்ட பளுதூக்கும் போட்டியில் மகாஜனக் கல்லூரி 5 தங்கம், 1 வெள்ளி மற்றும் 2 வெண்கலம் உள்ளடங்கலாக மொத்தமாக 8 பதக்கங்களைக் கைப்பற்றியுள்ளது.

17 வயது ஆண்கள் பிரிவினருக்கான 55 கிலோ கிராம் எடை பிரிவில் வி.சாதூரியன் 135 கிலோ கிராம் தூக்கி முதலாம் இடத்தையும் கே.ஒஷான் 100 கிலோகிராம் தூக்கி இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

17 வயது பெண்கள் பிரிவினருக்கான 45 கிலோகிராம் எடை பிரிவில் ரி.ஆரதி 62 கிலோகிராம் எடையை தூக்கி 3ஆம் இடத்தையும் மற்றும் 81 கிலோகிராம் எடை பிரிவில் எஸ்.சானுயா 75 கிலோ கிராம் எடையை தூக்கி 1ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

அத்துடன் 20 வயது ஆண்கள் பிரிவினருக்கான 67 கிலோகிராம் எடை பிரிவில் ஜே.கோமகன் 147 கிலோகிராம் தூக்கி 1ஆம் இடத்தையும் 109 கிலோகிராம் எடை பிரிவில் ஜெ.ஜெனுசின் 200 கிலோகிராம் தூக்கி 1ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

20 வயது பெண்கள் பிரிவில் 45 கிலோகிராம் எடை பிரிவில் ஜ.மிஷாஜினி 48 கிலோகிராம் தூக்கி 3 ஆம் இடத்தையும் 71 கிலோகிராம் எடை பிரிவில் ஆர்.ஸ்ரீவித்தகி 108 கிலோ கிராம் தூக்கி 1 ஆம் இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளனர். (3)



யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க.ஸ்ரீமோகனனின் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனும் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண விளையாட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் பா.முகுந்தனும் கலந்து சிறப்பித்தனர்.

**படம் - சிவசாந்தன்**



யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான கூடைப்பாந்தாட்ட இறுதிப் போட்டியில் சென்.பற்றிக்ஸ் அணியை எதிர்த்து யாழ். இந்துக்கல்லூரி அணி மோதியது. இந்நிலையில் 63:42 எனும் புள்ளி அடிப்படையில் யாழ்.இந்துக்கல்லூரி அணி சம்பியனைக் கைப்பற்றியது.

# பெண்களுக்கான உதைபந்தாட்டம்

## மகாஜனக் கல்லூரி சம்பியன்

2025 ஆம் ஆண்டிற்கான மாகாணமட்ட பெரு விளையாட்டுக்கள் வரிசையில் பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி கடந்த மாதம் 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் யா/வயாவிளான் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.




இப்போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் 17 மற்றும் 20 வயதுப் பெண்கள் அணிகள் இரண்டும் சம்பியன் வென்று சாதனை படைத்துள்ளனர்.

17 வயதுப் பெண்கள் அணியினருக்கான இறுதிப்போட்டியில் மகாஜனக் கல்லூரியை எதிர்த்து யூனியன் கல்லூரி அணி மோதியது.

இதில் மகாஜனக் கல்லூரி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று தொடர்ந்து நான்காவது வருடமாக மாகாணச் சம்பியனாகியுள்ளது.




அத்துடன் 20 வயதுப் பெண்கள் அணியினருக்கான இறுதிப் போட்டியில் மகாஜனக் கல்லூரியை எதிர்த்து மானிப்பாய் மகளிர் கல்லூரி அணி மோதியது. இதில் மகாஜனக் கல்லூரி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று தொடர்ந்து பத்தாவது வருடமாக மாகாணச் சம்பியனாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

# தோனியின் "கப்டன் கூல்" அடைமொழி

## வர்த்தக முத்திரையாகப் பதிவு

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் தோனி ரசிகர்களால் அன்புடன் "கப்டன் கூல்" என அழைக்கப்படுகிறார்.

அவருக்கு இந்தியா மட்டுமன்றி உலக அளவில் கோடிக்கணக்கான ரசிகர்கள் உள்ளனர்.

இந்நிலையில், வர்த்தக முத்திரை பதிவுக்கான வலைத்தளத்தில் "கப்டன் கூல்" என்ற அடைமொழியை அவர் பதிவு செய்து அதற்காக விண்ணப்பித்து உள்ளார்.

அவருடைய இந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டு விட்டது என அந்த வலைத் தளத்தில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இதற்காக கடந்த 5 ஆம் திகதி தோனி சார்பில் விண்ணப்பம் அனுப்பப்பட்டு உள்ளது. இதற்கான பதிவு பற்றிய அதிகாரபூர்வ தகவல் கடந்த 16 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (3)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 4

காவியத் தொடர் 810





பிறகு தான் என் தமையனை அவர் முதுகில் குத்தியதைப் பற்றிப் பிரஸ்தாபித்தேன். ‘இல்லவே இல்லை’ என்று சத்தியம் செய்தார், அக்கா!”

“நீயும் நம்பிவிட்டாயாக்கும்!”

“அப்போது நம்பும்படியாகத் தான் இருந்தது ஆனால் பிறகு நடந்ததையெல்லாம் யோசிக்கும் போது எதை நம்புவது, எதை நம்பாமலிருப்பது என்றே தெரியவில்லை”

“பிறகு இன்னும் என்ன அதிசயம் நடந்தது?”


“அவருடன் பேசிக் கொண்டிருக்கும் போதே என் ஒரு காதினால் அடுத்த அறையில் ஏதாவது சத்தம் கேட்கிறதா என்று கவனித்துக் கொண்டிருந்தேன். பல பேர் நடமாடும் சத்தமும் பேச்சுக் குரல்களும் கேட்டன. ஆகையால் அவரைக் கொல்லுவதற்கு யாரோ தொடர்ந்து வருகிறார்கள் என்பது உண்மையாகவே இருக்கும் என்று எண்ணிக் கொண்டேன். கேளுங்கள் அக்கா! அந்தச் சமயத்தில் இந்தப் பேதை மனம் எப்படியாவது அவரைக் காப்பாற்ற வேண்டும் என்று உறுதி கொண்டது. அவரைக் கொல்ல வருகிறவர்கள் யார் என்றும் தெரிந்து கொள்ள விரும்பினேன். இடும்பன்காரி இதற்கெல்லாம் உடந்தையாக இருப்பானா? அப்படியானால் அவன் இவருக்கு உடந்தையா? இவரைக் கொல்ல வருகிறவர்களுக்கு உடந்தையா? என்றும் அறிய விரும்பினேன். வேட்டை மண்டபத்துக்குள் வரும் இரகசியச் சுரங்க வழி இவ்வளவு பேருக்குத் தெரிந்திருப்பதை நினைத்துத் திகில் உண்டாயிற்று. அதிலும் நீங்கள் இங்கே தங்கப் போகிறீர்கள் என்பதை எண்ணியபோது கவலை அதிகமாயிற்று. தகப்பனாரைக் கூப்பிட்டனுப்பலாம் என்று நினைத்தால், அதற்கும் தைரியம் வரவில்லை. இவர் அந்தப்புரத்துக்குள் வந்திருப்பதைத் தகப்பனார் பார்த்தால், உடனே இவர் உயிருக்கே ஆபத்து வந்துவிடும். ஆகையால் இவரை இங்கேயே சற்று இருக்கும்படி சொல்லிவிட்டு, வேட்டை மண்டபத்திற்குள் இருப்பவர்கள் யார் என்று பார்த்து விட்டு வருவதற்காகக் கதவைத் திறந்து கொண்டு போனேன். உள்ளே ஐந்தாறு ஆட்கள் மூலைக்கு மூலை சுவர் ஓரமாக இருந்தார்கள். என்னைப் பார்த்துவிட்டு அவர்கள் பிரமித்து நின்றதாகத் தோன்றியது. அவர்களை அவ்விதம் பார்த்ததில் என் மனத்திலும் சிறிது பயம் உண்டாயிற்று. அந்தப் பயத்தைப் போக்கிக் கொண்டு கடுங்கோபத்தை வரவழைத்துக் கொண்டு அவர்கள் யார் என்று கேட்பதற்காக வாய் எடுத்தேன். இதற்குள், இந்த அறையில் என் தோழி சந்திரமதி மற்றொரு கதவு வழியாக ‘அம்மா! அம்மா!’ என்று கூப்பிட்டுக் கொண்டு வந்தாள். இவர் இங்கே இருப்பது எனக்கு உடனே நினைவு வந்தது. சந்திரமதி இவரைப் பார்த்துவிட்டுக் கூச்சல் போடப் போகிறாளே என்று பயந்து போனேன். வேட்டை மண்டபத்துக்குள் இருப்பவர்களை மறுபடி பார்த்துக் கொள்ளலாம் என்று திரும்பினேன். சந்திரமதியையும் வழி மறித்து அழைத்துக் கொண்டு இந்த அறைக்குள் வந்து பார்த்தேன். இங்கே அவரைக் காணவில்லை. மாயமாய் மறைந்து போய்விட்டார். ‘யாராவது இங்கே இருந்தார்களா?’ என்று சந்திரமதியைக் கேட்டேன், தான் பார்க்கவில்லை என்றாள். இன்னும் சிறிது தேடிப் பார்த்துவிட்டு மறுபடி வேட்டை மண்டபத்துக்குள் போனேன். அங்கேயும் நான் சற்றுமுன் பார்த்தவர்கள் யாரும் இல்லை. இடும்பன்காரி மாத்திரம் முன் போலவே அறையைச் சுத்தம் செய்து கொண்டிருந்தான். ‘சற்று முன்னால் இங்கே வந்திருந்தவர்கள் யார்? அவர்கள் இப்போது எங்கே?’ என்று கேட்டேன்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## பள்ளியில் திருட்டு



அலுவலக அறையை ஒட்டி இருந்த அறையில் இருந்து இருவர் தலையை நீட்டி பார்த்து விட்டு வெளியே வந்தனர். திறந்து இருந்த கதவை மெல்ல சாத்தி பூட்டு ஒன்றையும் பூட்டி விட்டு திரும்பினர்.அவர்கள் கையில் ஆளுக்கொரு பெட்டி போல ஏதோ வொன்று இருந்தது. சுற்றும் முற்றும் பார்த்து விட்டு இருவரும் சரசரவென நடந்து காம்பவுண்ட் அருகில் வந்து சுவர் மேலேறி அந்த பக்கம் குதிப்பதை திகிலுடன் பார்த்தனர். பாலுவும். ராமசாமியும்.

மறுநாள் காலை தலைமையாசிரியர் முன்பு நின்று நேற்றிரவு நடந்ததை அவரிடம் விவரித்தனர். அவர் இவர்கள் சொல்வதை கேட்டு விட்டு அந்த அறையை நோக்கி நடந்தார்.

எதற்கும் பொலிஸாரிடம் விவரம் தெரிவித்து விட்டு பின் அந்த அறையை திறக்கலாம் என்று முடிவு செய்தவர், திரும்பி அலுவலகம் வந்து பொலிஸாருக்கு தொலைபேசி மூலம் விவரம் தெரிவித்தார்.

பொலிஸ் ஆய்வாளர் முன் அந்த அறை திறக்கப்பட்டு உள்ளே இருக்கும் பொருட்கள் ஏதேனும் களவு போயுள்ளனவா என சோதித்தனர்.

அரசாங்கத்தால் இலவச கணனி மாணவர்களுக்கு வழங்குவதற்காக அங்கு அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. அதில் கிட்டத்தட்ட இருபதுக்கு குறையாமல் காணாமல் போயிருந்தது தெரிந்தது.

தலைமையாசிரியரிடமிருந்து புகார் பெறப்பட்டு பதிவும் செய்யப்பட்டது. பொலிஸ் ஆய்வாளர் ராமசாமியையும், பாலுவையும் யாரோ எதுவோ செய்தால் எனக்கென்ன? என்று பார்க்காமல் தைரியமாக அந்த இரவில் வந்து கண்டுபிடித்து சொன்னதற்கு பாராட்டு தெரிவித்தார்.

தலைமையாசிரியரும் அவர்களை பாராட்டி நல்ல வேளை திருடர்கள் மொத்தமாக கொள்ளையடித்தால் எங்கே கண்டுபிடித்து விடுவார்களோ என்று தினம் ஆளுக்கு ஒன்று என்று எடுத்து போயிருக்கிறார்கள்.

கிட்டத்தட்ட பத்து நாட்களாக இந்தத் திருட்டு நடந்து கொண்டிருக்க வேண்டும். நல்ல வேளை இன்றாவது கண்டு பிடித்து விட்டோம். இல்லாவிட்டால் எல்லோர் மீதும் சந்தேகப் பட்டு, எல்லோருக்கும் வீண் மன வேதனை ஆகியிருக்கும்.

ராமசாமியையும், பாலுவையும் எதிர்காலத்தில் அவர்கள் பொலிஸ் வேலைக்கு தகுதியான மாணவர்கள் என்று இப்பொழுதே பள்ளியில் இருக்கும் ஆசிரியர்கள் முதல் மாணவர்கள் வரை பேசிக் கொள்கிறார்கள்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 03

சொக்கன்

அதற்குப் பதிலாக, இந்த எட்டு பேருக்கும் திட்டம் வகுத்துக் கொடுத்து ஏவிவிட்ட மாஸ்டர் மைண்ட்கள் சிலர் இருப்பார்களே, அவர்களைக் கண்டுபிடிக்கின்ற முயற்சியில் இறங்கியது மொசாட். சாதாரணமாக உளவுத் துறையினர் ஒரு விசாரணையில் ஈடுபடுகிறார்கள் என்றால், அதற்கு ஏகப்பட்ட நுட்பங்களைப் பயன்படுத்துவார்கள். சில சமயங்களில் நேரடியாகப் போய் விசாரிப்பார்கள். சில நேரங்களில் மாறு வேஷம், புதிய பெயர்களில் மறைந்து சென்று உளவு பார்ப்பார்கள். இது தவிர, அவர்களைச் சுற்றியிருக்கும் நண்பர்கள், உறவினர்கள், வேலைக்காரர்களை விலைக்கு வாங்குவது, எலக்ட்ரானிக் சாதனங்களை ஒளித்து வைத்து அவர்களுடைய பேச்சுகளை ஒட்டுக்கேட்பது, அவர்களுக்கு வருகிற தபால், தந்தி, ஈமெயில், புறாக்காள் தூது அத்தனையையும் பிரித்துப் படிப்பது என்று இன்னும் பல வழிகள் இருக்கின்றன.

ஆனால், "பிளாக் செப்டம்பர்" விடயத்தில் மொசாட்டின் தில்லாலங்கடி வேலைகள் எதுவும் பலிக்கவில்லை. எவ்வளவோ முயன்றும் அந்தக் கல்லில் இருந்து நார் உரிக்க முடியாமல் திணறியது மொசாட். இதற்குக் காரணம், மொசாட் ஏஜென்ட்களைப் போலவே, "பிளாக் செப்டம்பர்" உறுப்பினர்களும் செம கில்லாடிகள், யாரோ தங்களை உளவு பார்க்கிறார்கள் என்கிற விடயம் தெரிந்ததும் உஷாராகி விட்டார்கள்.

அப்போதும், மொசாட் குழுவினர் சளைக்கவில்லை. முன்பைவிட அதிகத் தீவிரத்துடன் தகவல்களைத் தோண்டி எடுக்க ஆரம்பித்தார்கள்.

ஏனெனில், ம்யூனிக்கில் இஸ்ரேலிய வீரர்கள் பணயக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டிருந்த போது, மொசாட்டினால் எதுவும் செய்ய முடியவில்லை. ஜேர்மனி அவர்களுடைய கையைக் கட்டிப் போட்டுவிட்டது.

மொசாட் அமைப்பின் முக்கிய நோக்கமே, இஸ்ரேலுக்கு வெளியிலிருந்து வருகிற ஆபத்துகளைத் தடுப்பதுதான். ஆனால் இப்போது, அவர்கள் ம்யூனிக்கில் நடந்த படுகொலையைப் பார்த்துக் கொண்டு சும்மா உட்கார்ந்திருக்கும்படி ஆகிவிட்டது.

இந்தக் குற்றவுணர்ச்சி, ஆத்திரம் இரண்டும் சேர்ந்து, மொசாட் ஏஜென்ட்களை முனைப்புடன் செயற்படத் தூண்டியது. எப்படியாவது பிளாக் செப்டம்பர் பெருந்தலைகளைப் பிடித்து அழித்துவிட வேண்டும் என்கிற நோக்கத்துடன் வேலை சுறுசுறுப்பாக நடந்தது.

இதில் ஒரு பெரிய சிரமம் என்ன வென்றால், பிளாக் செப்டம்பரின் நடவடிக்கைகளைப்பற்றி மற்ற பாலஸ்தீன விடுதலைப் போராளி அமைப்புகளுக்கே அவ்வளவாகத் தெரியாது. அவர்களுடைய திட்டங்கள் ஒவ்வொன்றும் இரகசியமாக உருவாக்கப்பட்டு, அதை விட இரகசியமாகச் செயற்படுத்தப்பட்டன.

இதனால், பாலஸ்தீன மக்கள் மத்தியிலும், "ம்யூனிக் படுகொலையைச் செய்தவர்கள் யார்?" என்கிற பரபரப்பான கேள்வி உலாவியது. "இவராக இருக்குமோ", "அவராக இருக்குமோ" என்பதுபோல் ஏகப்பட்ட ஊகங்கள் கிசுகிசுக்கப்பட்டன.



இந்தத் தகவல்கள் அனைத்தையும் கவனமாகத் தொகுத்து வைத்தது மொசாட். அவர்கள் கேள்விப்பட்ட எல்லாப் பெயர்களையும் லிஸ்ட் போட்டு, ஒவ்வொருவருடைய புகைப்படம், வாழ்க்கைக் குறிப்பு, பழக்க வழக்கங்கள், ஆசை, பேராசை, பலவீனம், அண்டர்வேர் சைஸ் வரை சகல விபரங்களையும் திரட்டி விட்டார்கள்.

ஒரே பிரச்சினை, இந்த லிஸ்டில் இருக்கிற பாலஸ்தீனப் போராளிகளில் யாரெல்லாம் நிஜமாகவே ம்யூனிக் படுகொலைக்குக் காரணமாக இருந்திருக்கிறார்கள்? இந்த ஒரு தகவலை மட்டும் மொசாட்டால் உறுதி செய்யவே முடியவில்லை.

விடயம் பிரதமர் கோல்டா மெய்ரின் காதுகளுக்குச் சென்றது. "நிறையத் தகவல்கள் கிடைத்திருக்கிறது மேடம், இதில் எது உண்மை, எது வதந்தி, நாம் யாரைக் குறி வைக்க வேண்டும் என்று தான் சரியாகப் புரியவில்லை"

பிரதமர் யோசித்தார், "எல்லாத் தகவலையும் என்னிடம் கொண்டு வாருங்கள், அடுத்து என்ன செய்வது என்று பார்க்கலாம்"

இஸ்ரேல் பிரதமர் கோல்டா மெய்க்கு "இரும்பு மனுஷி" என்று ஒரு பெயர் உண்டு, ம்யூனிக் விவகாரத்தில் சரியான பதிலடி கொடுக்கவேண்டும் என்பதில் அவர் மிக உறுதியாக இருந்தார்.

காரணம், காலம் காலமாக இஸ்ரேலியர்கள் "ரொம்ப நல்லவர்கள். எத்தனை அடித்தாலும் தாங்கிக் கொள்வார்கள், திருப்பி அடிக்கமாட்டார்கள்" என்று ஒரு விம்பம் உருவாகிவிட்டது. இனிமேலும் தயங்கி நின்றால், நம் தலையில் எல்லோரும் சட்னி அரைக்க ஆரம்பித்து விடுவார்கள்.

ம்யூனிக் படுகொலையுடன் நேரடியாக, மறைமுகமாகச் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரையும் கண்டுபிடித்து அழித்தாக வேண்டும். இனிமேல் இஸ்ரேலுக்கு எதிராகத் துப்பாக்கி தூக்குகிற தைரியம் எவனுக்கும் வரக்கூடாது.

இதற்காகவே, கோல்டா மெய்ர் ஒரு விசேட குழுவை உருவாக்கினார். "கமிட்டி எக்ஸ்" என்று பெயர் சூட்டப்பட்ட இந்த இரகசியக் குழுவில் பிரதமரோடு மூன்று சீனியர் அமைச்சர்களும் இடம் பெற்றிருந்தார்கள்.

ம்யூனிக் விவகாரம் தொடர்பாக மொசாட் உளவாளிகள் திரட்டிய தகவல்கள் அனைத்தும், எக்ஸ் கமிட்டியின் பார்வைக்கு அனுப்பப்பட்டன. அவர்கள் அந்த விவரங்கள், ஆதாரங்களைப் படித்துப் பார்த்து யாரை என்ன செய்ய வேண்டும் என்று தீர்மானித்தார்கள்.

நியாயப்படி பார்த்தால், மொசாட்டின் ஹிட் லிஸ்டில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் ம்யூனிக் படுகொலையுடன் தொடர்பு உண்டா, இல்லையா என்பதைத் தான் கோல்டா மெய்ர் முதலில் ஆராய்ந்திருக்க வேண்டும். அதன்பிறகு, இப்போது அவர்கள் எங்கே வாழ்கிறார்கள் என்று கண்டுபிடித்து, அந்த நாட்டு அரசாங்கத்திடம் கெஞ்சிக் கூத்தாடி, அவர்களைக் கைது செய்து இஸ்ரேல் கோர்ட்டுக்குக் கொண்டுவர வேண்டும். விசாரணை நடத்த வேண்டும். செய்த குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்குத் தண்டனை கொடுக்க வேண்டும்.

ஆனால், இப்படியெல்லாம் நீட்டி முழக்கினால் ஏழெட்டு வருடங்கள் கழிந்துவிடும். அதற்குள் மக்கள் ம்யூனிக் விவகாரத்தையே மறந்துவிடுவார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பின் வழிப்படி காரியங்கள் செய்யும் அழகிய வாழ்க்கை வாழுங்கள். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார்...

**"மானம் வரின்"** என்று வள்ளுவன் உரைப்பது மானம் போவதையாகும்.

தன் உடலில் உள்ள ஒரு மயிர் உதிர்ந்தால் கூடக் கவரிமான் தன் உயிரை நீத்துவிடும்.

அதுபோல கௌரவமானவர்கள், மானஸ்தர்கள் தங்களின் மானத்துக்குப் பங்கம் வந்துவிட்டால், அவர்கள் வாழமாட்டார்கள். அவர்கள் உயிரைவிட்டுவிடுவார்கள்.

மானம் போனால், உயிர் நீப்பர் என்று வள்ளுவன் கூறுவது சால்புயர்ந்த மக்களையாம்.

இவ்வாறு வள்ளுவன் கூறுவதன் நோக்கம்; மானத்தைக் காப்பாற்றுவது உயிரினும் மேலானது என்ற உண்மையை உணர்த்தவே என்று பொருள் கொள்ளல் வேண்டும்.

ஆம், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிராந்தி ராஜபக்ஷவின் சகோதரன் நிசாந்த விக்கிரமசிங்க பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊழல் குற்றச்சாட்டின் பேரில் அவர் கைது செய்யப்பட்டிருப்பதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஷிராந்தி ராஜபக்ஷவின் சகோதரர் கைது செய்யப்படுவதற்கு முன்னதாக, மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோசித ராஜபக்ஷவும் கைது செய்யப்பட்டு மறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இதுதான் என்றால் இல்லை, அடுத்து மகிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிராந்தி ராஜபக்ஷவும் எந்நேரமும் கைது செய்யப்படலாம் என்ற தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

இதேவேளை தனது மனைவியைக் கைது செய்யாமல் தடுப்பதற்கு உதவுமாறு பௌத்த மகாநாயக்கர்களை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கேட்பதாகவும் சிங்கள ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இங்குதான் **"மானம் வரின்"** என்பதன் பொருள் மகிந்த ராஜபக்ஷ குடும்பத்துக்குப் பொருந்தாது என்று உணர முடிகிறது.

ஆம், இந்த நாட்டை ஆண்ட ஒரு ஜனாதிபதியின் ஒட்டுமொத்தக் குடும்பமும் ஊழல் குற்றச்சாட்டில் கைது செய்யப்படுகின்றது எனில், இப்படியும் சொத்தைச் சேர்க்க வேண்டுமா? இதுவும் ஒரு பிழைப்பா? என்று கேட்கத் தோன்றும்.

ஆம், நாடாளும் மன்னர்கள் உச்சமான நேர்மையுடையவர்களாக இருக்க வேண்டும். அதேபோன்று மன்னராட்சிக்கு ஒப்பான மக்களாட்சியில் யாரெல்லாம் அரசியல் செய்ய முற்படுகிறார்களோ அவர்களின் அணிகலன் என்பது நீதி, நேர்மை, உண்மை என்பதாக அமைவது அவசியம்.

இதைவிடுத்து மக்கள் வாக்களித்து அரசகட்டிலில் அமர்த்திவிட, நாட்டையே சூறையாடுகின்ற நாசகாரத்தனம் ஆட்சியாளர்களிடம் இருக்குமாயின், அவர்களை விட்ட தேசத்துரோகிகள் வேறெவராகவும் இருக்க முடியாது.

ஆக, ஊழல்வாதிகளை அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம் படிப்படியாகக் கைது செய்து வருகிறது.

அதேநேரம் நீதிமன்றமே குற்றவாளிகளுக்குத் தண்டனையைத் தீர்மானிப்பதாக இருப்பதால், அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்ந்தும் சீராக இடம்பெறும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

# அநுர அரசு தொடர்ச்சியாக மக்களை ஏமாற்றி வருகின்றது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அநுர தலைமையிலான திசைகாட்டி அரசு வாக்குறுதிகளை மீறித் தொடர்ச்சியாக மக்களை ஏமாற்றி வருகின்றது.

தற்போது இந்த அரசுக்கு ஏமாற்றே மிஞ்சிப் போயுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்று விசேட கூற்றை முன்வைத்து கருத்துத் தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பலவீனமான, வினைத்திறனற்ற, பொய் சொல்லும், ஏமாற்றும் தற்போதைய அரசு நாட்டு மக்களுக்குப் பெரும் தீங்கு விளைவித்து வருகின்றது. நேற்று முன்தினம் திடீரென எரிபொருட்களில் விலை அதிகரிப்பைச் செய்தது.

எரிபொருள்விலையை அதிகரித்த தற்போதைய அரசு, கடந்த தேர்தல் காலங்களில் ஏலவே காணப்படும் எரிபொருள் விலைச்சூத்திரத்தை மாற்றுவோம் எனக் கூறியது.

போதாக்குறைக்கு துறைமுகத்தில் இறக்கப்படும் எரிபொருளை அதே விலையில் நுகர்வோருக்கு பெற்றுத் தருவோம் என உரக்கத் தெரிவித்தது. துறைமுகத்தில் ஒரு விலைக்கு இறக்கப்படுகின்றது.

பின்னர் பொதுமக்களுக்கு மற்றொரு விலையில் விற்கப்படுகின்றது. ஊழல், மோசடி, திருட்டு மற்றும் இலஞ்சம் போன்றவையே இதற்குக் காரணம்.

இவை அனைத்தையும் நிறுத்துவோம். எரிபொருள் மீதான வரிகளை நீக்குவோம். துறைமுகத்தில் இறக்கப்படும் அதே விலையில் எரிபொருளை மக்களுக்குப் பெற்றுத் தருவோம் எனத் தற்போதைய ஆளும் தரப்பினர் வாக்குறுதியளித்திருந்தனர்.

ஆனால் தெளிவான அதிகாரத்தோடு ஆட்சிக்கு வந்த தற்போதைய ஆளும் தரப்பினரால் இன்றளவில் இதில் எதுவும் நடக்கவில்லை.

துறைமுகத்தில் இறக்கப்படும் அதே விலையில் நுகர்வோருக்கு தற்போது எரிபொருள் வழங்கப்படுகின்றனவா? என்பது குறித்தும் நாம் இந்த அரசிடமிருந்து தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

ஐ.எம்.எப்பின் 4 வது தவணையைப் பெறுவதற்கான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் விதமாகவே இந்த அரசு இவ்வாறு செயற்பட்டு வருகின்றது.

எரிபொருள் விலைச் சூத்திரத்தை மாற்றி அதை மேலும் மக்களுக்கு சாதகமான ஒன்றாக மாற்றியமைப்போம் என்று பிரஸ்தாபித்தவர்கள் இன்றும் கூட முன்னைய அரசின் எரிபொருள் விலை சூத்திரத்தையே பின்பற்றுகின்றார்கள். எரிபொருள் விலையேற்றம் செய்யப்பட்டதன் அடிப்படையை நாம் தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது என்றார். (ம-7)

## அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட தமிழக மீனவர்கள் கைது

(தலைமன்னார்)

இலங்கைக் கடற்கரைப் பரப்பில் அத்துமீறி மீன்பிடித்தனர் என்ற குற்றச் சாட்டின் கீழ் கைதான தமிழகம் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 7 மீனவர்களையும் எதிர்வரும் 11 ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த மீனவர்கள் நேற்று முன்தினம் இரவு எல்லை தாண்டிய குற்றத்திற்கான கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தலைமன்னார் கடற்படை முகாமில் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்தனர்.

விசாரணைகளின் பின் நேற்று மதியம் 7 மீனவர்களும் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதனையடுத்து குறித்த தமிழக மீனவர்கள் மன்னார் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையிலேயே அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார். (ம-7,285)

## பாம்புக் கடிக்கிலக்காகி குடும்பஸ்தர் உயிரிழப்பு

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆரையம்பதி திருநீற்றுக்கேணி கிராமத்தில் பாம்பு தீண்டி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் குறித்த நபர் தனது வீட்டுக்கு அருகாமையில் உள்ள குளக்கட்டு வழியாக நடந்து சென்று கொண்டிருந்த போதே பாம்பு தீண்டியதாக தெரியவருகிறது.

இதில் இரண்டு பெண் பிள்ளைகளின் தந்தையான யோகராசா தில்லைவாசகம் (வயது -38) என்பவரே உயிரிழந்தவராவார்.

சடலம் ஆரையம்பதி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

## சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை வீழ்ச்சி

(கொழும்பு)

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு விலைகள் கடுமையான வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளன.

உலக சந்தையில் WTI வகை மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 64.75 அமெரிக்க டொலராகக் குறைந்துள்ளது.

இதேபோல் பிரெண்ட் வகை மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 67.61 அமெரிக்க டொலராக வீழ்ச்சி அடைந்துள்ளது.

அதேவேளை இயற்கை எரிவாயு விலை 3.46 அமெரிக்க டொலராக வீழ்ச்சி அடைந்துள்ளது. (ம-7)

## ஆட்டோ கட்டணம் அதிகரிக்கப்படாது

(கொழும்பு)

முச்சக்கரவண்டிகளின் கட்டணம் அதிகரிக்கப்படாது என முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் பெற்றோல் விலை அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கையில் இதற்கு முன்னர் பல தடவைகளில் எரிபொருள் விலை குறைக்கப்பட்டுள்ளது. அந்தச் சந்தர்ப்பங்களில் முச்சக்கரவண்டிகளின் கட்டணம் குறைக்கப்படவில்லை.

அவ்வாறான நிலையில் நேற்று முன்தினம் இரவு எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதன் காரணமாக முச்சக்கரவண்டிகளின் கட்டணத்தை அதிகரிப்பது நியாயமற்றது.

அதுமாத்திரமன்றி முச்சக்கரவண்டிகளின் வாடகைக் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பான முடிவை தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் அந்தந்த மாகாணங்களின் பொதுப் போக்குவரத்து ஆணைக்குழுக்கள் மூலமாகவே மேற்கொள்ள வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்கள்-2025

## மேலதிகாரிகளின் அனுசரணை கிடைக்கும்!



**கிரக நிலை** - அயன சயன போக ஸ்தானத்தில் சுக்கிரன் - இராசியில் சூரியன், குரு - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் புதன் - தைரிய வீரிய ஸ்தானத்தில் செவ்வாய், கேது - பாக்கிய ஸ்தானத்தில் சனி, ராகு என கிரகங்கள் வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றம்:** 02.07.2025 அன்று பாக்கிய ஸ்தானத்தில் சனி வக்கிரம் ஆரம்பிக்கிறார். 03.07.2025 அன்று தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் புதன் வக்கிரம் ஆரம்பிக்கிறார். 17.07.2025 அன்று இராசியில் இருந்து சூரியன் தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 17.07.2025 அன்று புதன் பகவான் தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து இராசிக்கு மாறுகிறார். 26.07.2025 அன்று அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து சுக்கிரன் இராசிக்கு மாறுகிறார். 29.07. 2025 அன்று தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து செவ்வாய் சுக ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் இராசிநாதன் புதன் தன வாக்கு ஸ்தானத்தில் இருந்து இராசிக்கு ஆட்சியாக வருகிறார். பஞ்சம விரையாதிபதி சுக்கிரன் இராசிக்கு கிட்டத்தட்ட 1 வருடத்திற்கு பிறகு வருகிறார். வசதிகள் பெருகும். உறவினர்களுடன் சுமூக நிலை காணப்படும். வெளியூர் அல்லது வெளிநாட்டுப் பயணம் செல்ல நேரலாம். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும்.

பொருளாதார வளம் மேம்படும். தொழில் உன்னத நிலையை அடையும். குடும்பத்தில் முன்னேற்றமும் சுப நிகழ்ச்சிகளும் நடைபெறும். பண விரயமும் காரிய தாமதமும் ஏற்படலாம். எனினும் எந்த பிரச்சினையையும் முறியடிக்கும் வல்லமை உங்களுக்கு வந்து சேரும். தொழிலில் நற்பெயர் கிடைக்கும். மேலதிகாரிகளின் அனுசரணை கிடைக்கும்.

அரசு சார்ந்த விடயங்களில் பிரத்தியேகமான சலுகைகளை பெற முடியாமல் போகலாம். ஆனாலும் பதவி உயர்வும் சம்பள உயர்வும் தங்கு தடையின்றி கிடைக்கும். வியாபாரிகள் முன்னேற்றப் பாதையில் செல்ல முடியும். வரவு ,செலவு கணக்கை சரியாக வைத்துக் கொள்ளவும். அரசியல்வாதிகள் வாகனங்களைப் பிரயோகப்படுத்தும் போது கவனம் தேவை.

கலைஞர்கள் நல்ல புகழும் பெருமையும் கிடைக்கப் பெறுவர். இராசிநாதன் மற்றும் சுகாதிபதியான புதன் மிக அனுகூலமாக சஞ்சரிப்பதால் மாணவர்




கள் சிறப்பான பலனைக் காணலாம். நல்ல மதிப்பெண்கள் கிடைக்கும். மேல் படிப்பில் விரும்பிய பாடம் கிடைக்கும். வழக்கு விவகாரங்கள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். கைவிட்டுப் போன பொருட்கள் மீண்டும் கிடைக்கும்.

**மிருகசீரிடம் 3, 4 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் குடும்பத்தில் பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அவர்களின் நலனுக்காக பாடுபடுவீர்கள். கணவன், மனைவிக்கிடைய நெருக்கம் உண்டாகும். சகோதரர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். மனதில் துணிச்சல் ஏற்படும். கடன்கள் கட்டுக்குள் இருக்கும்.

**திருவாதிரை:** இந்த மாதம் முக்கியமான வேலைகளில் தாமதம் உண்டாகும். வீண் பிரச்சினைகளை கண்டால் ஒதுங்கி சென்று விடுவது நல்லது. முன்னேற்றம் காண கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். எதிர்பார்த்த சில தகவல்கள் தாமதமாக வரும். கூட இருப்பவர்களிடம் கவனமாக இருப்பது நல்லது. ஒரு சில காரியங்களில் அவசரமாக முடிவு எடுப்பதை தவிர்ப்பது நன்மை தரும்.

**புனர்பூசம்1, 2, 3ஆம் பாதங்கள்:** இந்த மாதம் புதிய ஓடர் விடயமாக தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் வெளியூர் செல்ல நேரிடும். பழைய பாக்கிளை வசூலிப்பதில் வேகம் காண்பீர்கள். புதிய கிளைகள் தொடங்க நினைப்பவர்கள் அதற்கான முயற்சியை தள்ளி போடுவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக வேலையாக முக்கிய நபர்களை சந்திக்க வேண்டி இருக்கும். கொடுத்த கடனை திருப்பி வாங்க முயல்வீர்கள்.

**பரிகாரம்:** புதன்கிழமை மற்றும் சனிக்கிழமைகளில் அருகிலிருக்கும் பெருமாள் ஆலயத்திற்குச் சென்று வலம் வரவும்.

**சந்திராஷ்டம தினங்கள்:** 12, 13

**அதிஷ்ட தினங்கள்:** 01, 27, 28

## வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும்!



**கிரக நிலை** - லாப ஸ்தானத்தில் சுக்கிரன் - அயன சயன போக ஸ்தானத்தில் சூரியன், குரு - இராசியில் புதன் - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் செவ்வாய், கேது - அஷ்டம ஸ்தானத்தில் சனி, ராகு என கிரகங்கள் வலம் வருகிறார்கள்.


**கிரகமாற்றம்:** 02.07.2025 அன்று அஷ்டம ஸ்தானத்தில் சனி வக்கிரம் ஆரம்பிக்கிறார். 03.07.2025 அன்று இராசியில் புதன் வக்கிரம் ஆரம்பிக்கிறார். 17.07.2025 அன்று அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து சூரியன் இராசிக்கு மாறுகிறார். 17.07. 2025 அன்று புதன் பகவான் இராசியில் இருந்து விரைய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26.07.2025 அன்று லாப ஸ்தானத்தில் இருந்து சுக்கிரன் அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 29.07.2025 அன்று தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து செவ்வாய் தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் இராசியில் புதன் இருக்கிறார். இராசிக்கு மாத மத்தியில் சூரியன் வருகிறார். எதிர்ப்புகள் அகலும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். உங்களின் பொருளாதார வலிமை கூடும். அதேவேளையில் பொருட்களின் மீது கவனமும் தேவை. இழப்பு ஏற்படலாம். வாழ்க்கையில் பொன்னான வாய்ப்புகள் தேடி வரும்.

வாழ்க்கை வளம் முன்னேறும். அதேவேளையில் தெய்வ அனுகூலத்துடனும் காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள். உடன் வேலை செய்வோரின் ஆதரவால் அதனைச் சமாளிப்பீர்கள். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் தங்கு தடையின்றி நடக்கும். தேவைகள் பூர்த்தியாகும். கணவன் மனைவிக்கு இடையே அன்பு நீடிக்கும். வீட்டில் சின்ன சின்ன வாக்கு வாதங்கள் தலை தூக்கலாம். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து போவதால் நிலைமையைச் சமாளிக்கலாம்.

உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். சிலருக்கு இடமாற்றம் சம்பந்தப்பட்ட ஆலோசனைகள் நடக்கும். உடன் பணிபுரிவோரால் அனுகூலம் உண்டு. உங்கள் பொறுப்புகளை வேறு நபரிடம் ஒப்படைக்க வேண்டாம். வியாபாரத்தில் சீரான வளர்ச்சி இருக்கும். அலைச்சல் இருக்கும்.

கலைத்துறையினருக்கு தீவிர முயற்சிகளின் பேரில் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். உங்கள் திறமைக்கு ஏற்ற




புகழ் பாராட்டு கிடைக்காமல் போகலாம். அரசியல்வாதிகள், சமூக சேவகர்கள் பிரதிபலனை எதிர்பார்க்காமல் உழைக்க வேண்டியிருக்கும். மாணவர்கள் அதிக சிரத்தை எடுத்து படிப்பது நல்லது.

**புனர்பூசம் 4ஆம் பாதம்:** இந்த மாதம் குடும்பத்தில் வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம். கவனமாக பேசுவது நல்லது. உறவினர்கள், குடும்ப நண்பர்களிடம் முக்கிய விடயங்களை ஆலோசனை செய்வதையும், அடுத்தவர் பற்றி பேசுவதையும் தவிர்ப்பது நல்லது. கணவன், மனைவிக்கிடையே அனுசரித்து செல்வது நல்லது. வாகன சுகம் ஏற்படும்.

**பூசம்:** இந்த மாதம் எதிர்பார்த்த தகவல்கள் தாமதமாக வரும். கூட இருப்பவர்களிடம் எந்த விடயத்தையும் சொல்லும் போது கவனம் தேவை. பொருளாதாரம் உயரும். எதிர்ப்புகள் விலகும். கடன் தொடர்பான பிரச்சினைகள் தீரும். பல வகையான யோகங்கள் ஏற்படும்.

**ஆயில்யம்:** இந்த மாதம் உடல் நோய்கள் நீங்கி ஆரோக்கியம் உண்டாகும். மனக் குழப்பம் நீங்கும். ஆனால் பிறருடன் பழகும் போது நிதானம் தேவை. தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். தொழில் தொடர்பான காரியங்கள் வெற்றி பெறும். பொருளாதார முன்னேற்றம் உண்டாகும். பழைய பாக்கிகள் வசூலிப்பதில் வேகம் பிடிக்கும். வியாபாரம் தொடர்பான பிரச்சினைகளில் சாதகமான நிலையே உண்டாகும்.

**பரிகாரம்:** திங்கட்கிழமை அன்று அருகிலிருக்கும் ஏதேனும் ஒரு அம்மன் கோவிலுக்குச் சென்று 11 முறை வலம் வருவது நன்மை தரும்.

**சந்திராஷ்டம தினங்கள்:** 14, 15

**அதிஷ்ட தினங்கள்:** 02, 03, 29, 30, 31.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஸ் கட்டணம்...

2.5 சதவீதத்தால் குறைப்பதற்குத் தீர்மானித்திருந்த போதிலும் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருள் விலை அதிகரித்ததன் காரணமாக பஸ் கட்டணத்தை 0.55 சதவீதத்தால் குறைப்பதற்குத் தீர்மானித்துள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி ஜூலை 04ஆம் திகதி நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் பஸ் கட்டணம் 0.55 சதவீதத்தால் குறைக்கப்படும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)

## விபரீத...

நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் தெல்லிப்பழை இன்பசிட்டி கிழக்கைச் சேர்ந்த செல்டன் ஸ்ரீதரன் (வயது-47) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 27ஆம் திகதி அதிகாலை விபரீத முடிவெடுத்து நஞ்சருந்திய நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை (01) காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## கிணற்றில்...

மரணமடைந்தவராவார்.

கடந்த 29ஆம் திகதி நள்ளிரவு இவர் கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை (30) இரவு சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-7,60)

## மின்சாரம்...

பழுது பார்த்துக்கொண்டிருந்த ஊழியர் ஒருவருக்கே மின்சாரம் தாக்கியுள்ளது.

மின்சாரத் தாக்குதலுக்குள்ளான ஊழியரை சக ஊழியர்கள் மீட்டு, யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். (ம-7,33)

## ஓமந்தையில்...

கான காணி ஆவணங்கள் இல்லாத நிலையில் தற்போதும் அது அரச காணியாகக் காணப்பட்டு வருகின்றது.

எனினும் குறித்த காணிக்குச் சொந்தம் கோரும் நபர் இக் காணி தனக்குரியது என பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட அரசாங்க அதிபரிடம் முறைப்பாடு செய்த நிலையில் இதுவரை அவருக்குக் காணிக்கான ஆவணங்கள் கொடுக்கப்படாத நிலையிலேயே பொலிஸார் காணியைத் துப்புரவு செய்துள்ளனர்.

இந்த நிலையிலேயே காணி உரிமையாளரை அச்சுறுத்தி துப்புரவு செய்ததாகவும் தெரியவருவதோடு குறித்த காணியில் விகாரை ஒன்றை அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்வதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (ம-7)

## முல்லைத்தீவு...

பிச் செல்ல முயன்ற முல்லைத்தீவு பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதான இளைஞன் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன், இந்தியாவின் மும்பை நகரத்துக்குச் செல்வதற்காக நேற்று முன்தினம் காலை கட்டுநாயக்க விமான நிலையத்திற்குச் சென்றுள்ள நிலையில், அந்த விமானத்தில் ஏறாமல், மாலை 05.31 மணியளவில் இந்தியாவின் மும்பை நகரத்தை நோக்கிச் செல்லவிருந்த மற்றுமொரு விமானத்துக்காகப் பயணச்சீட்டை கொள்வனவு செய்துள்ளார்.

இதன்போது விமான நிலைய குடிவரவு மற்றும்குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இளைஞனின் பயணப்பொதியிலிருந்து போலியாகத் தயாரிக்கப்பட்ட பிரான்ஸ் ஸ்பெயின் கடவுச்சீட்டுகள் இரண்டு கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபரான இளைஞனிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், சந்தேக நபர் இந்தியா சென்று பின்னர் அங்கிருந்து ஐக்கிய இராச்சியத்திற்கு தப்பிச் செல்ல முயன்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் இந்தியாவிலுள்ள தரகர் ஒருவரின் உதவியுடன் போலி கடவுச்சீட்டுகளை தயாரித்துள்ளதாக விசாரணையில் மேலும் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட இளைஞர் மேலதிக விசாரணைகளுக்காக விமான நிலைய குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ம-7)

## நீதிமன்ற...

முறையான நீதிமன்ற அனுமதியுடன் குறித்த பழைய செம்மணி வழக்கை புதிய வழக்குடன் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை பாதிக்கப்பட்ட தரப்பு செய்வதற்கான ஆலோசனை நடக்கின்றது என சட்டத்தரணி ரனித்தா ஞானராஜா தெரிவித்தார்.

செம்மணி மனிதப்புதைகுழி அகழ்வுப் பணிகள் தொடர்பாக நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே சட்டத்தரணி ரனித்தா ஞானராஜா இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பழைய செம்மணி புதைகுழி வழக்கு நடவடிக்கையில் ஈடுபட்ட பிரதான சட்ட வைத்திய அதிகாரி அகழ்வு நடந்த பிரதேசத்திற்கு நேற்று வருகை தந்தார். தற்போது அகழ்வுப் பணியில் ஈடுபடும் சட்ட வைத்திய அதிகாரியோடு பேசி கடந்த அகழ்வுப் பணி தொடர்பான தகவல்களை வழங்கியிருந்தார்.

பழைய செம்மணி வழக்கும் புதிய செம்மணி வழக்கும் வேறு வேறு வழக்காக இருந்தாலும் இரண்டு வழக்கையும் தொடர்புபடுத்த வேண்டிய நிலைமை இருப்பதனால் முறையான நீதிமன்ற அனு மதியுடன் குறித்த பழைய செம்மணி வழக்கை புதிய வழக்குடன் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை பாதிக்கப்பட்ட தரப்பு செய்வதற்கான ஆலோசனை நடக்கின்றது.

ஏற்கெனவே தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவா குழுவினரால் அடையாளப்படுத்தப்பட்ட சந்தேகத்துக்கிடமான பகுதிகள் நீதிமன்ற அனுமதிக்கமைய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினுடைய தொல்லியல் துறை மாணவர்களின் உதவியுடன் நல்லூர் பிரதேச சபை ஊழியர்களின் உதவியுடன் சேர்ந்து தற்போது துப்புரவாக்கப்பட்டு பூர்வாங்க பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்றார். (ம-7,33)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.07.01
சீட்டிழுப்பு இலக்கம் 5877
K 5 6 9 8 7 7
அத சம்பத K 9 8 7 7
சீட்டிழுப்பு இலக்கம் 0452
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.07.01
சீட்டிழுப்பு இலக்கம் - 1907
O 03 04 20 65 O
Double Chance 91419

மெகா பவர்
திகதி 01/07/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2225
T 15 11 23 43 65

ஜய
திகதி 2025.07.01
சீட்டிழுப்பு இலக்கம் 0145
P 3 9 5 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4119
சீட்டிழுப்பு திகதி 01.07.2025
I 14 25 26 40
I

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.07.01
சீட்டிழுப்பு இலக்கம் 1186
ரிஷபம் 05 06 37 46 ரிஷபம்
95478 22

உத்தியோகபூர்வ முடிவுகள்
01.07.2025 வெற்றி வாரம் 585
F 8 7 9 6 1 2
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,361,492.00
0585

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2851
சீட்டிழுப்பு திகதி 2025.07.01 தினம் செவ்வாய்க்கிழமை
19 27 30 38 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 72,151,800.80

சனிதா
திகதி 01.07.2025 வெற்றி வாரம் 5012
43 72 73 75 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 70,061,075.20

சசிரி
வெற்றி வாரம் 716
சீட்டிழுப்பு திகதி 01.07.2025
செவ்வாய்க்கிழமை
30 32 37
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

சீட்டிழுப்பு வாரம் 4563
சீட்டிழுப்பு திகதி 01.07.2025 தினம் செவ்வாய்க்கிழமை
24 30 53 61 துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,055,232.40

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
F 21 32 42 54 62
2027 01.07.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.580,388,748.00

அட கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் 2677
சீட்டிழுப்பு திகதி 2025.07.01
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.67,928,156.80
11 36 37 67 J
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்புக் கூடுகளை ...

என்று முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ வலியுறுத்தியுள்ளார்.

செம்மணி மனிதப் புதைகுழியில் இடம்பெறும் அகழ்வுப் பணிகளின் போது பாடசாலை மாணவரின் நீல நிறப்பை ஒன்று மீட்கப்பட்டமை தொடர்பில் கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வினவப்பட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

குறித்த அகழ்வுப் பணிகள் நிறைவடையும் வரையில், இந்த விடயத்தில் இறுதி முடிவுக்கு வர முடியாது. தொடர்ந்தும் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படும் போது சில சந்தர்ப்பங்களில் இராணுவத்தினரின் ஆடை அல்லது அதிலிருந்த இலக்கத் தகடு ஏதாவது மீட்கப்படலாம்.

இதன்போது, விசாரணைகள் வேறு பக்கம் திரும்பும். இந்தநிலையில் இன்னும் 15 நாட்களுக்கு அங்கு கண்காணிப்பு, பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

எனவே அந்த 15 நாட்களுக்குப் பின்னர் இந்த விடயத்தில் இறுதி முடிவுக்கு வர முடியும் என்று விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் குறித்த இடம் யுத்தம் நிலவிய பிரதேசமாகும். அங்கு சகல பக்கங்களிலிருந்தும் துப்பாக்கிப் பிரயோகங்கள் நடத்தப்பட்டுள்ளன.

உயிரிழந்தவர்கள் யாருடைய துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர்கள்? என்பது மட்டுமே தற்போது தெரியாமல் உள்ளது.

எனவே உயிரிழந்த மக்களின் என்புக்கூடுகளைத் தேடிக் கடந்த காலத்தைத் தோண்டும் நடவடிக்கை தற்போது தேவையற்ற விடயமாகும்.

மாறாக, எதிர்காலத்தில் அவ்வாறான சம்பவங்கள் நிகழாமல் தடுப்பதற்கு மக்களின் இதயங்களைக் குணப்படுத்த வேண்டும். இருப்பினும் இதயங்களைக் குணப்படுத்தும் நடவடிக்கைகளுக்குப் பதிலாக மீண்டும் வெறுப்பை ஏற்படுத்தும் செயற்பாடுகளே தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.

இதனூடாக இலங்கைக்கு நன்மை கிடைக்கப்போவதில்லை. சர்வதேச சக்திகளுக்கும் பயங்கரவாதக் குழுக்களுக்கும் இலங்கையின் இனங்களுக்கு இடையே வெறுப்பை ஏற்படுத்த வேண்டிய தேவையே உள்ளது.

அவர்களின் தனிப்பட்ட அரசியலுக்காகவே இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன என்று விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார். (ம-7)

## நிஷாந்த ...

சந்தேகநபர்களை எதிர்வரும் 8 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் முன்னாள் ஆணையாளருடன் அந்தத் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற தகவல் தொழில்நுட்ப உதவி பணிப்பாளர் பிரியந்த பண்டார எரியகம மற்றும் தம்மிக்க நிரோஷன் ஆகியோர் கையூட்டல் ஒழிப்பு ஆணைக் குழுவினால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

முறையான சுங்க அனுமதி இல்லாமல் ஜீப் ரக வாகனமொன்றைப் பதிவு செய்வதற்கு அனுமதி அளித்ததாக அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில் கைதான மூவரும் நேற்றுக் கொழும்பு பிரதம நீதவான் தனுஜா லக்மாலி முன்னிலையில் பிரசன்னப்படுத்தப்பட்டபோது இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக கையூட்டல் ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன் விசாரணைகளில் 177 வாகனங்கள் நாட்டிற்கு சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்டு சுங்கச் சான்றிதழ் இன்றி பதிவு செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை ஆராய்ந்த கொழும்பு பிரதம நீதவான் சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

நிஷாங்க வீரசிங்க முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிராந்தி ராஜபக்ஷவின் சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ஒன்லைனில் அபராதம் அமைச்சரவை அனுமதி

அரசாங்கம் அறிமுகப்படுத்திய முன்னோடித் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் ஒன்லைன் போக்குவரத்து அபராதம் செலுத்தும் திட்டத்தை செயற்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும் வாகனங்களில் ஆசனப் பட்டி அணிய வேண்டியதன் அவசியம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கொட்டாவை அதிவேக நெடுஞ்சாலை நுழைவாயிலுக்கு அருகில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சிக்குப் பிறகு ஊடகங்களிடம் உரையாற்றும் போது அமைச்சர் இவ்வாறு கூறினார். (ம-7)

## மேலதிக ...

மருதலிங்கம் பிரதீபன் முன்னிலையில் நேற்றுக் காலை 8.45 மணியளவில் அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இந்நிகழ்வில் பிரதம கணக்காளர், திட்டமிடல் பணிப்பாளர், பிரதம பொறியியலாளர், உதவி மாவட்டச் செயலாளர், நிர்வாக உத்தியோகத்தர் உள்ளடங்கலான பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

மேலதிக அரசாங்க அதிபராக கடமையேற்ற கைலாயபிள்ளை சிவகரன் முன்னர் வேலணை பிரதேச செயலாளராக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## சிறுவர்கள் ...

செம்மணி மனிதப் புதைகுழியில் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணியின் ஆறாம் நாள் பணிகள் நேற்று செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

செம்மணி மனிதப்புதைகுழி வழக்கில் பாதிக்கப்பட்டோர் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி ரணிதா ஞானராஜா நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

அண்மையில் பாடசாலை புத்தகப் பையுடன் கண்டுபிடிக்கப்பட்ட எலும்புகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

அந்தப் புத்தகப்பையுடன் ஒரு குழந்தைகள் விளையாடும் பொம்மை மற்றும் செருப்பு ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இதுவரை கண்டெடுக்கப்பட்ட 33 எலும்புக்கூடுகளுடன் நேற்று கண்டெடுக்கப்பட்டவை மேலதிகமானவை என்பதுடன் ஐந்து தொகுதிகளாக இவை கண்டெடுக்கப்பட்டுள்ள நிலையில் எத்தனை என முடிவாக கணிக்க முடியாமல் உள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (ம-7,33)


VACANCIES

Data Entry Operator, Accounts Assistant, Management Trainee, Store Keeper, Marketing Officer, Online Admin, Parttime Staffs (4688)

076 098 4532, 077 773 3368

நான்கு வகை நிலத்திலும்
காணி விற்பனைக்கு!

எழுதுமட்டுவாழ் நகரில்
8 இலட்சம் முதல்
* தவணைக் கட்டண வசதிகள் செய்து தரப்படும்.






முல்லை - எழுதுமட்டுவாழ் | மருதம் - கிழக்கு அரியாலை | குறிஞ்சி - மலையகம் (ஹப்புத்தளை நகர்) | நெய்தல் - மட்டக்களப்பு (வாவிக் கரையோரம்) (C-3318)

விளையாட்டு, ஆரோக்கியம், பாதுகாப்பு, பொழுதுபோக்கு என 20+ இற்கு மேற்பட்ட வசதிகளுடன்..!

இப்போதே முன்பதிவு செய்யுங்கள்!

இனிமையான வாழ்விற்கு..! GOOD GIFT PROPERTY DEVELOPERS (PVT) LTD.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் +94 77 743 5557


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்


ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3316) 076 825 7716 (ஆகாஸ்)

வெளிநாட்டில் வசிக்கும்
மணமகளிற்கு மணமகன் தேவை

1999 கனடா, 1995 லண்டன், 1987 அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் வசிக்கும் பெண்களுக்கு உள்ளூர், வெளியூர் மணமகன்கள் தேவை (1282)

077 041 3462
077 408 8241

வெளிநாட்டில் வசிக்கும்
மணமகனிற்கு மணமகள் தேவை

1990 இல் பிறந்த கனடாவில் வசிக்கும் மணமகனுக்கு உள்நாட்டில்/ வெளிநாட்டில் வசிக்கும் மணமகள் தேவை (1282)

077 335 3461

சிறுநீரகம் தேவை

O+ இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரக நோயாளி ஒருவருக்கு அவசரமாக சிறுநீரகம் தேவைப்படுகிறது.
45 வயதுக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. (1279)

075 728 6051

கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3960/-
11-16 Kg 2790/-
21-30 Kg 2650/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery

UK 11Kg - 1400/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2500/- | Australia 11Kg - 1980/- | Italy 11Kg - 2260/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237 (C-3317)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் இல. 191, [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.